தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 4 | சென்னை | 5-10-57 | சனிக்கிழமை | இதழ் 14

பசும்பொன்னர் பொதுவாழ்வு

இருபதாண்டுகளுக்கு முன் தென்னாட்டுத் தேசியத் திலகங்களில் ஒருவராகத் திகழ்ந்தவர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரவர்கள். இளைஞர்களின் இரத்தத்தைக் கொதிக்கவைத்து நரம்புகளில் முறுக்கேறிடச் செய்யும் இணையற்ற சொற்பொழிவாளராக விளங்கினார். நாவன்மையைப் பொறுத்த மட்டில், சத்தியமூர்த்தியை நினைக்கும் போது முத்துராமலிங்கத் தேவரின் நினைவு வராமற்போகாது. தமிழினத்தின் வெண்கலத் தொனி அவருக்கிருந்தது. அவருடைய தேசிய வாழ்க்கையின் தொடக்க காலத்திலிருந்தே தேவரின் குரலிலே அதிகாரம் கலந்திருந்தது. 'எந்தலை பட்டாளம் வந்திட்டாலும் எதிர்த்து நிற்பாண்டா (முத்து)ராமலிங்கம்!' என்று கட்டபொம்மன் பாணியிலேயே அவர் பேசிப் பழக்கப்பட்டவர். இன்றும் அவருடைய பேச்சில் 'பழைய பர்ணி' இருப்பதற்குக் காரணம், தேவரின் 'பிறவிக்குணம்' என்று சிலர் இப்போது முடிவுகட்டியிருக்கிறார்கள். அது மெய்யாகக் கூட இருக்கலாம்! ஆனால் வெள்ளையனை எதிர்ப்பதற்குப் பெரும்படை திரட்டி தென்னாட்டில் பெருந்தலைவராக விளங்கிய முத்துராமலிங்கத் தேவரின் புகழும் செல்வாக்கும் இடைக்காலத்திலே திடீரென்று குறையக் காரணம் என்ன? தேவர் அவர்கள் பொது வாழ்க்கையில் வெறும் சொற்பொழிவாளராக மட்டும் விளங்கியதால், காங்கிரசின் ஊழியர்களுக்கு மத்தியில் முத்துராமலிங்கத் தேவரைப் பற்றிய எந்தப் பிரச்சினையும் வாதத்திற்கு வராமலிருந்துவிட்டது. சத்தியமூர்த்திக்கும், ஆச்சாரியாருக்கும் இருந்ததைப் போல், காமராசருக்கும் கோவை சுப்பையாவுக்குமிடையே நிலவியதைப்போல, அந்தக் காலத்தில் தேவருக்கும் வேறு ஒரு முக்கியஸ்தருக்கும் பிணக்கு இருந்திருக்குமானால் தேவர் இடைக்காலத்திலே மங்கிப் போயிருக்க நியாயமில்லை. இன்றைய தினம் அதாவது இன்றைய காங்கிரஸ் தலைவர்களுக்குமிடையில் பெருத்த இடைவெளியை ஏற்படுத்தியது. அந்த முறிவு, தேவரை அரசியலைவிட்டு ஒதுங்கியிருக்க வைத்தது. தேவருக்கு அதன்மூலம் கிடைத்த ஓய்வு அவரை பக்தி மார்க்கத்திற்கு அனுப்பிவைத்தது. என்று அவர் உருத்திராக்கத்தை கழுத்தில் கட்டி, சாம்பலை (விபூதி)யை இடுப்பில் சொருகினாரோ அன்றைய தினமே தமிழகம் ஒரு சக்தி பெற்ற தலைவனை இழந்துவிட்டது என்று உண்மையான காங்கிரஸ் ஊழியர்கள் வருந்தினார்கள்.

அவருடைய நிலையே வேறுதான். மிக உயர்ந்திருப்பார். தேவர் அந்தக் காலத்தில் எவருக்கும் சுமையாக இருந்ததில்லை. தேவரின் இறங்கு முகத்திற்கு இன்னொரு காரணமும் உண்டு. அந்நியர் ஆதிக்கத்தை இந்தியாவிலிருந்து விரட்ட வேண்டும் என்ற சுதந்திர உணர்ச்சியில் திளைத்திருந்த முத்துராமலிங்கத் தேவர் அவர்கள், எந்த அந்நியரை விரட்ட வேண்டுமென்று அல்லும் பகலும் பாடுபட்டாரோ, அந்த அந்நியன் ஒழியுமுன்பே, தேவர் அவர்கள் அவருடைய கொள்கையில் ஒரு மாற்றத்தை செய்துகொண்டு விட்டார். வெள்ளையர்களை ஒழிப்பதற்கு காங்கிரஸ் இயக்கம் கொண்டிருந்த கொள்கையில் தேவருக்கிருந்த நம்பிக்கை அழிந்துவிட்டது. அவர் புரட்சியிலே நம்பிக்கை வைக்கஆரம்பித்தார். சமுதாயத்திலே திடீர் மாற்றத்தை அவர் எதிர்பார்த்தார். யாரை நம்பி-எந்த வடநாட்டு சக்தியை நம்பி, தமிழகத்தில் தேவர் தனது கொள்கையை மாற்றிக்கொண்டாரோ அந்த வடநாட்டு சக்தி தனது அற்ப ஆயுளில் மறைந்தது தேவரின் எதிர்காலத்திற்கு பங்கமாக முடிந்துவிட்டது. தேவருக்கேற்பட்ட இந்தத் தோல்வி, காங்கிரஸ் மிதவாதிகளுக்கும்-

பசும்பொன் தேவர் அவர்கள், வெள்ளையன் போன பிறகு, தன்னுடைய புரட்சிக்கு ஆதரவு தேடிக்கொண்டு, அவரே கொள்கை வகுப்போராக ஆகியிருந்தால் இன்றைய தென்னாட்டுக் காங்கிரஸ், தேவர் விரல் நீட்டிய திசையிலேயே பாயும் வேட்டை நாயாக இருந்திருக்கும். அவருடைய தீவிரவாதம், அவருடைய உழைப்பை-உணர்ச்சிப் பெருக்கை-சுதந்திர தாகத்தை விழுங்கிவிட்டது. தேவரின் கருத்து வேறுபாடு, இன்றையக் காங்கிரஸ்காரர்களுக்குச் சாதகமாக மாறியது; காந்தியருக்கும் போசுக்கும் இருந்த இடைவெளி, தென்னாட்டில் காங்கிரசுக்கும் தேவருக்குமிடையே ஏற்படுவதற்கு அது துணை புரிந்தது. மக்களின் மனோநிலையை உணர்ந்து கொண்டு பிரகடனப்படுத்தாத எந்த நல்ல கொள்கையும் இது வரை வெற்றிபெற்றதில்லை. ஜெயப்பிரகாஷ் நாராயணன், ஆச்சார்ய கிருபளானி, அருணா அசப்அலி ஆகியோரின் படுதோல்விகள் இதற்குச் சான்றுகளாகும். 'தென்னாட்டுச்சிங்கம்

— 8-ம் பக்கம் —



நான் சிறுவனாக இருந்தபோது அந்த ஊருக்குச் சென்றிருக்கிறேன். அந்த நாளில் நான் ஐந்தாம் வகுப்புப்படித்துக்கொண்டிருந்தேன். சாந்தி அப்போது இரண்டாம் வகுப்போ என்னவோ படித்துக்கொண்டிருந்தாள். அதன் பின்பு நான் சாந்தியைப் பார்த்ததில்லை. சிலமுறை அத்தை மட்டும், நகரத்தில் இருக்கும் எங்கள் வீட்டிற்கு வந்திருக்கிறார்கள்.

அம்மா கேட்பார்கள், "ஏன் அண்ணி, சாந்தியை அழைத்து வருவது தானே? செல்வம் தன் மனைவியைக் காணத் துடியாய்த் துடிக்கிறானே!" என்று. "அப்படியொன்றும் என்மகள் இவனைத் தேடி வந்துவிடமாட்டாள்! சாந்தியைக் காண இவன்தான் ஓடிவர வேண்டும்......ஏண்டா மருமகப் பிள்ளை! வருகிறாயா?" என்று என்னை அன்போடுஇழுத்தணைத்து உச்சி மோந்து முத்தமிடுவார்கள் அத்தை. நாணமும் மான உணர்ச்சியும் என்னை ஆட்கொள்ளும். அத்தையின் பிடியிலிருந்து என்னை விடுவித்துக் கொண்டு, "நான் ஒன்றும் சாந்தியைப் பார்க்க உன்னுடன் ஓடி வரமாட்டேன்!" என்று விளையாடத் தெருவுக்கு ஓடி விடுவேன். அம்மாவும் அத்தையும் கலகலவென்று சிரிக்கும் ஒலி என் காதில் விழும். அந்த இன்பமான நாட்களை எண்ணினால், ஏன் சிறுபிள்ளையாகவே இருந்திருக்கக் கூடாது என்ற நினைப்பு தோன்றுகிறது.

பத்தாண்டுகளுக்கு முன்பு சிறுமியாய், பாவாடையுடுத்தி என்னுடன் கைகோர்த்து தெருவில் விளையாடிய சாந்தி, இன்று பருவ மங்கையாய்க் காட்சி தருவாள்!-நடந்துகொண்டே சாந்தியின் எழிலுருவை நினைவுத்திரையில் பல கோணங்களில் கண்டு ரசித்தேன்.

மாலை நேரம். ஆற்றின் குளிர்ந்த நீரில் நடந்து கொண்டிருந்தேன். என் உள்ளத்திலோர் இன்ப உணர்ச்சி! ஆற்றிலே நீர் முகக்க அத்தை வரும்போதெல்லாம், அவர்களுடன் நானும் சாந்தியும் வருவோம். சாந்தியின் முகத்திலே நீரை வாரி இறைப்பேன். "பாரம்மா செல்வத்தை! என் முகத்தில் தண்ணீரைத் தெளிக்கிறான்!" என்று சிணுங்குவாள். "சாந்தி என்னை ஏன் செல்வம் என்று கூப்பிடுகிறாள்? அதனால் நான் தண்ணீர் இறைத்தேன்!" என்று ஆண்மையுடன் சொல்வேன். 'அத்தான் என்று கூப்பிடம்மா. உன்னைவிட பெரியவனாயிற்றே செல்வம். கணவனைப் பெயரிட்டு அழைக்கலாமா?" என்பார்கள் அத்தை, சிரித்துக் கொண்டே. 'போ அத்தை!'-'போ அம்மா!' என்று எங்கள் இருவர் குரலும் ஒரே நேரத்தில் ஒலிக்கும். நாணத்தால் சாந்தியின் முகம் சிவக்கும்.

அன்று 'செல்வம்' என்று என்னை அழைத்த சாந்தி, இன்றும் அப்படியே அழைப்பாளா? சாந்தியுடன் கைகோர்த்து நான் தெருவில் விளையாட முடியுமா?

ஆற்றைக் கடந்து நடந்தேன். கோலச் சிற்றிடையில் குடத்தைத் தாங்கி, கூவும் குயில் குரலில் பேசிச் சிரித்துக்கொண்டே பெண்கள் என் எதிரில் வந்தனர். மனம் போட்ட தடையை மீறி என் கண்கள் அந்தக் கோதையரை நோக்கிச் சுழன்றன; தாரகைகளுக்கிடையில் ஒளிமழை பொழிந்துசெல்லும் தண்மதியைப் போன்று, அந்தப் பெண்களுக்கிடையில் களங்கமற்ற நிலவு முகத்தாள் ஒருத்தியைக் கண்டேன். யாரோ அவள்!

சாலையின் ஓரத்தில் பெரிய மாமரம் ஒன்றைக் கண்டேன். கனிகள் அதில் பழுத்துத் தொங்கிக்கொண்டிருந்தன! நாக்கிலே நீர் சுரந்தது! சுற்று முற்றும் பார்த்தேன். ஒருவரும் தெரியவில்லை. கனியொன்றைப் பறிக்கக் கை துடித்தது. என்ன இது-பை நிறைய பழங்களை வைத்திருந்தேன். எல்லாமே தீஞ்சுவைக் கனிகள். ஆனால், அன்னியனின் தோப்பிலிருக்கும் கனியை மனம் நாடுகின்றதே, இது முறையா? வெட்கித் தலைகுனிந்தேன். சிரிக்கும் குரலொலி கேட்டது. தோப்பின் பக்கம் என் விழி திரும்பியது. புல் தரையில் இருவர் அமர்ந்திருந்தனர். மறைவான இடம். அவர்கள் சிரித்திராவிட்டால் நான் அவர்களைப் பார்த்திருக்கவே முடியாது! கோதையின் கூந்தலை அந்தக் கட்டிளங்காளை கோதிவிட்டுக் கொண்டிருந்தான்! சில கணநேரம் நினைவற்று நின்றேன்.

அனுபவித்து உணர்ந்துதான் மனதைக் குரங்கு என்றார்களோ? கனிகளை நாடி, மந்தி மரத்திற்கு மரம் தாவுவதைப்போல, மனமும் அழகை நாடி தாவித் தாவிச் செல்வதேன்? முன்பு மனம், மரத்திலிருந்த கனியைப் பறிக்கக் கையைத் தூண்டியது; காதலனுடன் கொஞ்சி மகிழ்ந்துகொண்டிருக்கும் அழகியைப் பார்த்துக்கொண்டே இருக்கும்படி இப்போது கண்களைத் தூண்டுகிறது! மாமரம் தோப்புக்காரனின் சொத்து! மங்கை அவள் மனதைக் கவர்ந்தவனின் சொத்து! சபலத்தைவிட்டு-மனதைத் திருத்திக்கொண்டு நடந்தேன்.

மலையில் முகம் மறைத்துக் கொண்டு சூரியன் மேற்கு வானில் வண்ண ஓவியம் தீட்டிக்கொண்டிருந்தான். இந்த எழிலோவியம் இன்னும் எவ்வளவு நேரம் இருக்கும்? இருள் கவிழ்ந்ததும் எல்லாமே அதற்கு அடிமையாகிவிடுமே! வாழ்வும் அப்படித்தான். பிஞ்சு நெஞ்சிலே எழும் இன்ப எண்ணங்கள் எல்லாம் வாழ்விலே நிகழ்ச்சிகளாய் மலர்ந்தால், துன்பத்தைப் பற்றி நினைக்கவும் நேரமிருக்காதே! எவ்வளவோ எண்ணங்கள் – இனிய நினைவுகள் – கானல் நீராகிவிடுகின்றன!

இருபத்து நான்கு வயது முற்றுப்பெறாத இந்த வாலிபப் பருவத்தில், என் வாழ்விலே எத்தனை பயங்கரத் திருப்பங்கள்! இரண்டே இரண்டு ஆண்டுகளில் நான் அனுபவித்த இன்னல்கள் எவ்வளவு மாண்டு மடிந்து போன துயரச் சம்பவங்களை என் மனம் நினைவுத் திரையில் நிழற்படமாக்கியது. கண்கள் கலங்கின. பெருமூச்சுவிட்டேன்.

என் பெயருக்கேற்பவே பெற்றோரால், நான் செல்வமாக வளர்க்கப்பட்டேன். நான் வழக்கறிஞனாக வேண்டும் என்று எனது தந்தை விரும்பினார். சட்டக் கல்லூரியில் பயின்றவர்கள் தானே பிரமுகர்களாகவும், அரசியல் தலைவர்களாகவும் இருக்கிறார்கள்! எனக்கென்று எந்தவிதக் குறிக்கோளும் லட்சியமும் இல்லாதவன் நான். அடிக்கடி உடை மாற்றிக்கொள்வதிலும், உடலழகைக் கவனிப்பதிலும், நண்பர்களுடன் சேர்ந்துகொண்டு 'பிக்னிக்' போவதிலும் பொழுதைக் கழித்தேன். ஆனால், படிப்பிலும் முதல்வனாக இருந்தேன்.

கல்லூரிப் படிப்பின்போதுதான், என் உள்ளத்தில் காதல் மலர்ந்தது. வேணி என் நெஞ்சைக் கவர்ந்தாள். அவளது முல்லைச் சிரிப்பும், முளரி வதனமும், பிறை நுதலும், பேசும் கண்களும் என உள்ளத்தைக் கவ்வினாற்போலவே, எனது தோற்றமும் அவள் விழிகளுக்கும் உள்ளத்திற்கும் வேலை கொடுத்தது!

விளக்கைச் சுற்றி வட்டமிடும் விட்டில்களைப்போல; மாணவர்கள் வேணியின் கண்ணின் கடைப் பார்வைக்காக 'கடுந்தவம்' கிடந்தனர்! தங்கநிற மேனியாள் வேணியின் அங்க அமைப்பு அழகிற்கோர் எடுத்துக் காட்டாக இருந்தது! அவளுருவம் மனதிலே தோன்றும்போது இன்ப மயக்கம் ஏற்படும்!

பிறரைப்போல நான் நிழல்போல வேணியைத் தொடரவில்லை, வெறித்தவனைப்போலப் பார்த்து பெருமூச்சு விடவில்லை; குழுவாகச் சேர்ந்து அவளைச் சூழ்ந்து ஆரவாரம் செய்யவில்லை. 'சுய புராணம்' படிக்கவில்லை. பொறுமையைக் கையாண்டேன். தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்தேன். எனது எண்ணத்தைச் கூறினேன். அவள் சம்மதித்துவிட்டாள்.

வேணியை நான் மணக்க முடிவு செய்திருப்பதைக் குறித்து தந்தைக்குக் கடிதமெழுதினேன். அன்னை அபாய நிலையிலிருப்பதாகவும் உடனே வரும்படியும் அவரிடமிருந்து தந்தி வந்தது. அலறிப் பதறிக்கொண்டு ஊருக்குப் போனேன். என் கால்களைக் கட்டிக் கொண்டு அன்னை அழுதார்கள். தந்தை உறுதியாகக் கூறிவிட்டார். 'என் மனம்போல் நான் நடப்பதானால் வீட்டை விட்டு வெளியேறும்படி! ஆத்திரத்தை எதிர்ப்பதில் சிரமமிருப்பதில்லை. அன்பிலே பிறந்த அன்னையின் கண்ணீரைக் கண்டு நான் செயலற்றவனானேன். 'உனக்கென்றேபிறந்த உன் அத்தை மகள் சாந்தியை மறந்துவிட்டாயா? கல்லூரிப் படிப்பு உனக்குக் கற்றுத் தந்த பாடம் இதுதானா? குடும்பத்தின் மதிப்பை-குலத்தின் கௌரவத்தைக் குலைத்துவிடாதே! சாந்தியைஅபலையாக்கிவிடாதே!' என்று அன்னை கதறினார்கள். கண்ணீரால் என்னைக் குளிப்பாட்டினார்கள்!

சில நாட்கள் என் மனம் சூனிய வெளியில் சஞ்சரித்துக்கொண்டிருந்தது! பரீட்சை நெருங்கி வந்து கொண்டிருந்ததை உணர்ந்தேன். அன்னைக்கு நல்ல பதிலைக் கூறாமலேயே, வெதும்பிய உள்ளத்துடன் நீர் வடியும் கண்களுடன் நான் புறப்பட்டேன். வேணியின் உருவத்தை என் நினைவுத் திரையிலிருந்து இழித்துவிட முடியவில்லை.

தேர்வு முடிந்தது. ஊருக்கு வரும்படி தந்தையிடமிருந்து கடிதம் வந்தது. அவர் மனம் நோகும்படி பதில் எழுதினேன். அன்னை அபாய நிலையிலிருப்பதாக அவசரத் தந்தி வந்தது. அதற்கு நான் பதிலும் எழுதவில்லை. அன்னை இறந்துவிட்டார்கள் என்று மீண்டும் ஒரு தந்தி வந்தது! என்னை ஊருக்கு வரச் செய்வதற்காகத் தந்தை செய்யும் தந்திரம். அவரே வழிக்கு வரும் வரை, ஊரின் திசைப் பக்கமும் திரும்பிப் பார்க்கக்கூடாதென்று நிர்மானித்தேன். தந்தியைவேணிக்குக் காட்டினேன். எல்லாம் வெறும் புரட்டு என்று கூறி, அவளை அழைத்துக்கொண்டு, உலவி வர கடற்கரைக்குச் சென்றேன். இன்பமாகக் காலம் ஓடிக்கொண்டிருந்தது!

செய்தித் தாளில் தேர்தலின் முடிவு வெளியாயிற்று! எதிர்பார்த்தபடியே நான் முதல் வகுப்பில் தேறியிருந்தேன்! வேணியும் அவ்வாறே! செய்தித் தாளில் அடுத்த பக்கத்தைப் புரட்டிய வேணி, கரம் நடுங்க அதை என்னிடம் நீட்டினாள். கண்ட நான், நஞ்சுடைய நாகத்தை மிதித்தவன்போல அலறினேன்! என் தந்தை இறந்துவிட்டதாக அதில் வெளியாகி இருந்தது. என் கண்கள் சுழன்றன! மேற்கொண்டு வேணியைப் படிக்கச் சொல்லிக் கேட்டேன்:

'சங்கரலிங்கம் காலமானார். சமீபத்தில் இவர் மனைவி காலமாகிவிட்டதாகத் தெரிகிறது. இவருக்கு ஓர் மகன் உண்டு. அவனது நடவடிக்கைகளால் மனமுடைந்து போன சங்கரலிங்கம், தமது சொத்து முழுமையையும் தமது தங்கையின் மகளுக்கு எழுதி வைத்துவிட்டதாகவும் தெரிகின்றது'

-வேதனையைப் போக்கிக்கொள்ள நான் தனிமையை நாடினேன். அமைதி இருக்குமிடம் எங்கே என்று தேடினேன். என் பிரிவால் ஏற்பட்ட வேதனையால்மனம்குமுறி இறந்துவிட்ட அன்னை, என் கண்ணெதிரில் நிழலுருவில்காட்சியளித்தார்கள்! கடைசி நேரத்திலும்அவர்களைக் காணமல் இருந்துவிட்ட எனது கன்னெஞ்சம், இப்போது கதறிக் கதறி ஓயாது ஓலமிட்டு அழுதது! உணவை வெறுத்தேன்; உலகை வெறுத்தேன். ஏன், வாழ்வையே வெறுத்தேன். எனினும் ஓர் சக்தி என்னை வாழச் செய்தது! அந்த ஒரே ஒரு சக்திதான் வேணி.

பத்திரிகையில் செய்திவெளியாகி ஒரு வாரம் சென்றது. வேணியைக் காண நான் சென்றேன். 'என் பெற்றோரின் முடிவும் தங்கள் தாய் தந்தையரைப்போலவே ஆகிவிடக் கூடாது என்பதற்காக, எனது எண்ணத்தைமாற்றிக்கொண்டேன் செல்வம்!' என்று திருமணத் தாளை என்முன் நீட்டினாள் வேணி. படித்தேன்! வேணிக்குத்திருமணம். மயங்கித் தரையில் வீழ்ந்தேன்.

படித்ததால் கிடைத்த நன்மதிப்பிதழைக் கரத்திலேந்திக் கொண்டு, வேலை தேடும் படலத்தை ஆரம்

முல்லைவழுதி

—11ம் பக்கம்—

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!"

எண்ணம்

கண்ணதாசன்

மலர் 4 || 5—10—57 || இதழ் 14

அக்டோபர் 13!

(எண்சீர் இசைச் சந்தம்)

பாடைமொழி ஓட்டிவிட மாநாடெ டுத்தோம்!
பதிமூன்று நாளென்று தெடுவுங்கு றித்தோம்!
வாடைவருந் தென்வாசற் கதவம்அ டைத்தே
மங்காத தமிழ்பாடச் சபதம்எ டுத்தோம்!
வாடிவரும் தாயேஉன் பாதத்தின் ஆணை
வருவாளா இந்திப்பெண்! வரட்டுங்கை பார்ப்போம்!
ஓடிவரும் பேய்ப்பெண்ணே வாஇந்தப் பக்கம்!
ஒன்பதுபேர் மனையாட்டி! உனக்கென்ன வெட்கம்!

வங்காள நாயகனை ஓடிப்பி டித்தாய்!
மாராட்டி ஆடவனின் கூடப்ப டுத்தாய்!
எங்கேனும் யாரேனும் கைகாட்டி னாலும்
எப்போதும் செயலாகும் தப்பாத கற்பின்
பங்காளி யன்றோ?உன் பட்டாடை யெல்லாம்
பல்லோரும் தொட்டாண்ட புத்தாடை யன்றோ?
வங்காளம் மாராட்டி எல்லாமிப் போது
வாலாட்டும் உன்வாழ்வை வீழ்த்தல்தப் பாது!

தென்னாட்டு மண்ணாண்ட தென்னாட்டு மன்னர்
தீராதி தீரர்தம் வழிவந்த நாங்கள்
அண்ணாந்து போர்தேடி நிற்கின்ற வேளை!
அக்டோபர் பதிமூன்றில் கொள்வோம்கை வாளை!
மண்ணாகும் வரைஉன்னை வாளாவ றுத்து
வாய்ப்பண்டி தர்தம்மை இங்கேஅ ழைத்து
தொண்ணூறு துண்டள்ளிக் கையில்கொ டுத்து
தூதாவென் றேகாரித் துப்பித்து டைப்போம்!

'பங்'தேனும் 'சங்'தேனும் தாண்டன்க ளேனும்
பஞ்சாபில் வாழ்இந்தி நோஞ்சான்க ளேனும்
வந்தார்க்கு மனையாகும் தென்னாட்ட மைச்சின்
மண்டுகப் பெரியோர்கள் தாமேனும் எங்கள்
செந்தாழம் பூச்சாதித் தென்பாண்டி மண்ணை
தீச்சாதிப் பெண்ணுக்கே ஆளாக வைத்தால்
அன்றேஎம் தமிழ்ரத்தம் கொண்டோடும் ஆற்றில்
அன்னாரின் தலைகூடச் சேர்ந்தேமி தக்கும்!

அறிவாரும் பெரியோரும் சிறியோரும் ஒன்றி
அக்டோபர் பதிமூன்றில் எதிர்ப்போர்மு ழக்கி
உருவாகும் பெருஞ்சேனை ஒன்றுய்ந டத்தி
உண்னாட்டின் எண்ணங்கள் யாவும்உ ணர்த்தி
கருவோடு இந்திப்பெண் தனைவீட்ட வேண்டும்!
கல்நாட்டு நாளென்று கொண்டாட வேண்டும்!
மறவாதீர்! அக்டோபர் பதிமூன்று! ஆமாம்!
மானம்உள் ளோர்மட்டும் வருவீர்அந் நாளில்!

— 10ம் பக்கத் தொடர்ச்சி —

னுக்கு நண்பர்கள் ஏற்பட்டார்கள். பல கருத்துக்களையும் பரிமாறிக் கொள்ளும் இனிய நண்பராக, சோமனுதன் அவன் அருகிலேயே இருந்தார். இப்படியாக ஒரு எழுத்தாளனுக அவன் உருக் கொண்டான். 'ஆம்! அவன் 'எழுத்தாளன் ஆனது எப்படி' என்பதுதானே இந்தக் கட்டுரையின் நோக்கம்! ஆகவே அவன் அரங்கேறியதோடு கட்டுரையை நிறுத்திக் கொள்ளுவோம்.

இதுவரை வந்த 'அவ'னை எல்லாம் 'நான்' ஆக்கிக்கொண்டு அந்த 'அவ'னை 'நான்'பேனுப் பிடித்த வேளையில் முதல் முதலாக எழுதிய கவிதையைக் கீழே தருகிறேன்:

[இது 1943-ம் ஆண்டு, 'திருமகள்' எனப் பெயரிய-நான் ஆசிரியராக இருந்த-இதழில் வெளியாகியது]

அவள் கடிதம்

*காலைக் குளித்தெழுந்து
கருஞ் சாந்துப் பொட்டுமிட்டு
கருநாகப் பாம்பெனவே
கார்கூந்தற் பின்னலிட்டு
காத்திருந்தேன் உம்வரவை
கடைக்கண்ணுல் பார்த்திருந்தேன்!*

*கண்ணில் தெரிகிலைநீர்!
கனவுலகில் சஞ்சரித்தீர்!
அந்தி மயங்க
அடிவானம் செக்கரிட
அண்டை அறியாமல்
ஆடவன் நீர் ஓடி வந்தீர்!
தந்தையில் லத்திலில்லை!
தாயும்வெளிப் போயிருந்தாள்!
தகதகத்த உம்எழிலில்
தண்குணத்தாள் சொக்கிவிட்டேன்*

*உம்அழகுக் கென்மனத்தை
ஒத்தியாய் வைத்தபின்னர்
உளத்தைத் திடப்படுத்தி
ஓர்வார்த்தை கேட்டுவிட்டேன்!*

*"யார் நீங்கள்" என்றதற்கு
"ஆணழகன்" என்றிறுத்தீர்!
"அதைக்கேட்க வில்லை! உமை
அறிந்துகொண்டேன்; கண்ட
வுடன்*

*அத்தை மகன்போல
அவசரமாய் ஓடிவந்த
வித்தை தனைக்கூறி
விரைவில்வெளி யேறு"மென்
றேன்*

*"கண்ணே" எனக்கூவி
கரத்தைப் பிடித்துவிட்டீர்!
கரம்பறிக்க எத்தனித்தேன்
காதல் தடுத்ததையோ!
கட்டிப் பிடித்தீர்!
கனியமுத்தம் கொடுத்தீர்!
காதற் களஞ்சியத்தைக்
கலவியினால் கட்டிவிட்டீர்
பின்னர் பிரிந்தஉமை
பேதையின்னும் காணவில்லை
ஒரு நாளை இன்பமென்று
உருவாகி விட்டதையோ!
ஒன்றும் புரியவில்லை
உடன்வந்து காவீரோ!
சொல்லாலே கொல்லுகிறார்!
சோர்வு பொறுக்கவில்லை!
உற்றார் உளங்களிக்க,
ஊராரின் வாயடைக்க
பெற்றார் உடன்வந்து
பேதையெனைக் காவீரோ!*

இங்ஙனம்
காதலி.

—முற்றிற்று—

19-10-57 தேதி இதழிலிருந்து

வாழ்க்கையில் வந்த நண்பர்கள்

கண்ணதாசன்

எழுதும்

தொடர்கட்டுரை

[பல்வேறு 'பிரகிருதி'களை வாழ்க்கையில் சந்திக்கிறோமே அவர்கள் ஒவ்வொருவருக்கும்தான் எத்தனை விசித்திரமான குணங்கள்!

இந்தத் தொடர்கட்டுரையில் நண்பர்களின் பெயர்கள் வராது. குணங்கள் வரும்! ஏதாவது ஒரு குணசித்திரத்தைப் பார்த்து, இது தான்தான் என்று யாராவது மயங்கினுல், அதற்குக் கட்டுரையாளர் பொறுப்பாளியாக மாட்டார்.]

இதுதான் திராவிடநாடு

பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார் எம்.ஏ., எல்.டி

- 2 -

தமிழகத்தில் உள்ள ஊர்ப்பெயர்கள், மரபுப் பெயர்கள், ஆற்றுப் பெயர்கள் தென்கிழக்காசியாவெங்கும் கடல் கடந்து, சாவா, போர்னியோ, செலிபிஸ் தீவுகள் வரை காணப்படுகின்றன. பண்டைச் சப்பானிய எழுத்துக்கள் தமிழ் எழுத்துக்களின் திரிபே என்று சப்பானிய பழமையாராய்ச்சியாளர் குறித்துள்ளனர்.

சேரநாட்டவரையும் திபெத்தியரையும் போலவே, சினர் தம்மை வானவர் என்று குறித்துக்கொண்டனர். இம்மூன்று நாடுகளிலும், சப்பானிலும் உள்ள கோயில்கள், நாடகங்கள் ஆகியவற்றின் ஒப்புமைகள் வரலாற்றுக்காலத் தொடர்பு கடந்தவை. இன்று சினர் மங்கோலிய இனத்தவர் என்று எப்படியோ கருதப்பட்டு வருவதனுல், சினரின் தென்கிழக்காசியத் தொடர்பு மறக்கப்பட்டு, மறைக்கப்பட்டு வருகிறது. ஆனுல் சினரே வடசினத்தின்மீது ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் படை எடுத்துச் சூறையாடிய மங்கோலியக் காட்டுமிராண்டிகளை வெறுத்தனர். அவர்களைத் தடுத்து நிறுத்துவதற்காக அவர்கள் கட்டிய நாலாயிரம் கல் நீளமுடைய கோட்டை, 'நெடுமதில்' என்று இன்றளவும் உலக அதிசயங்களில் ஒன்ருகப் பாராட்டப்படுகிறது. மங்கோலியரும் அவ்வினத்தவரான மஞ்சூரியரும் குடியேறி வாழ்ந்த பகுதி இன்றும் மங்கோலியா, மஞ்சூரியா என்று குறிக்கப்படுகின்றன. தென்சினம் இன்றைய வடமங்கோலிய மஞ்சூரியப் பகுதிகளிலும் பழமை வாய்ந்த நாகரிகமுடைய தென்பதையும் அதுவே உண்மைச்சினம், பண்டிருந்து நாகரிகம் வளர்ந்த சினம் என்பதையும் இது காட்டுகிறது. தமிழ், தமிழின நாகரிகங்களுடன் இனத்தொடர்பும் நாகரிகத் தொடர்பும் தொல் பழங்கால வரலாற்றுத் தொடர்பும் மிக்க பகுதி இது.

பண்டைத்தமிழரும், மலாய் மக்களும் கடலோடிகளாய் இருந்தனர். பிரிட்டன் உலகில் ஒரு பெருங் கடலரசாக வளர்ந்த காலம் 19-ம் நூற்ருண்டேயாகும். அதுவரை உலகின் கடற் பேரரசுகளாகவும் வாணிபப் பேரரசுகளாகவும் நிலவியவர்கள் இவர்களே. மேற்கே நடுநிலக்கடல் நாடுகளில் பரவிய 'திரையர்' பண்டைத் திராவிட இனத்தவரே என்று திருத்தந்தை ஹிராஸ் குறிப்பிடுகிருர். அதுபோல அவர்கள் கிழக்கேயும் சீனம், சப்பான் கடந்து நெடுந்தொலை கடல் கடந்தும் கடலோரமாகவும் பரவியிருந்தனர். அமெரிக்கப் பழங்குடி மக்களைப் பற்றி ஆராய்பவர்கள் அக்கண்டத்தின் பழம்பெரும் நாகரிகங்களான மய, பெருவிய இனங்கள் திராவிட இனத்துடனும், தென்கிழக்காசிய நாகரிகத்துடனும் மிகப் பழந்தொடர்புடையவை என்று குறித்துள்ளனர். வெற்றிலை, பாக்கு, சுண்ணக் கலவை இத்தொடர்புக்குரிய ஒரு சின்னம் என்று அவர்கள் கருதுகின்றனர்.

இங்ஙனம் விந்தமுதல் குமரி வரை மொழியின வாழ்வு பெருக்கி, மேற்கும் கிழக்கும் பண்டை நாகரிக உலகெங்கணும் பண்பு பரப்பிய உலகின் தலை மாநிலமே திராவிட நாடு.

கதிரவன் வழிபாடு, நாக வணக்கம், உழவுத்தொழில், நெற்பயிர் விளைவு, பருத்தி நூற்றல் நெசவு, ஆனிரை பயிர்ப்பு முதலிய பண்புகளை, உலகெங்கும் பரப்பிய ஒரு தொல் பழங்காலப் பேரினம் இருந்ததென்று, 'கதிரவன்சேய்கள்' என்ற பழமையாராய்ச்சி நூலில் டபிள்யூ. ஜே. பெரி என்ற அறிஞர் விரித்து விளக்குகிருர். எகிப்தியரும், தென்னுட்டவரும் இவ்வினத்தின் இரு பெருங்கிளைகள் என்று அவர் கருதுகிருர். 'உலக வரலாறு' இயற்றிய எச். ஜி. வெல்ஸ் என்பார், மேற்கிலும் கிழக்கிலும் மட்டுமன்றி, வடக்கிலும் தெற்கிலும்கூடக் கிட்டத்தட்ட நாகரிக உலகெங்குமே தமிழினத்துடன் தொடர்புடைய ஒரு பழம் பேரினம் பரவியிருந்ததென்றும், மற்ற உலகப் பகுதிகளில் அது பின்வந்த பல இனங்களுடன் கலந்துவிட்டாலும், கிட்டத்தட்டத் தனிப் பண்புடன் தென்னுட்டில் இன்றுவரை உயிர் வளர்ச்சி பெற்று வருகிறதென்றும் தெரிவிக்கிருர். மொழிப்பண்பிலும் வானூல், உழவு, நெசவு, கரும்பாலைத் தொழில், இரும்பு, கனிச்சுரங்கத் தொழில், சிற்பம் ஆகியவற்றிலும் இன்றைய மனித நாகரிகம் தொடங்கு முன்பே தமிழினத்தவர் இக்கால உலகம் வியந்து மூக்கில் கை வைக்கும் உயர் வளம்பெற்றிருந்தனர் என்று, கில்பர்ட் ஸ்லேட்டர் என்பார் 'இந்திய நாகரிகத்தில் திராவிடப் பண்பு' என்ற நூலில் குறித்துள்ளார்.

இவ்வாறு பண்டைப் பழங்காலத்திலிருந்தே வாழ்ந்த மாநிலம், நாகரிகம் தோற்றுவித்து வளர்த்து, உலகில் பண்பும் கலையும் பரப்பி வழிகாட்டி உலகாண்ட நாடு திராவிடம். இன்னும் உலகாள, உலகின் மறுமலர்ச்சி தூண்டிப் புத்துலகம் ஆக்க, புது வாழ்வு காணத் துடிக்கும் மறுமலர்ச்சி, புது மலர்ச்சிக் கனவுகளைத் தன்னுள் கருகிடயில் அடக்கிக்கொண்டிருக்கின்ற நாடு அது. ஆனுல் தற்போது அது பண்டைப் பெருமையும் இழந்து, புதுப்பெருமை அடைவதற்கு முடியாதபடி விடுதலை தவறிக்கெட்டு, பெயரிழந்து, பண்பிழந்து கையும் காலும் கட்டப்பட்டு, மயக்க மருந்துக்கும் நச்சுச்சூழல்களுக்கும் ஆட்பட்டு நலியும் நிலையில் உள்ள நிலமாகக் காட்சியளிக்கிறது.

வரலாறு அறிந்தவர்கள் வாய்விட்டு அலறக்கூடும். வருங்காலம் அவாவுபவர்கள், உலகவளம் காணத்துடிக்கும் நல்லோர் அங்கலாய்க்கக்கூடும். ஆனுல் திராவிடத்தின் இந்நிலை மாற்றவேண்டுமானுல், திராவிட மக்களிடையே இவ்வரலாற்றறிவு, இவ்வருங்கால அவா, உலக அவா எழுப்பப்படுதல் வேண்டும். அவர்கள் தன்னறிவு, தன்இன அறிவு, தன்னம்பிக்கை ஆகியவை பெற்று உலக வாழ்வில் தங்குதடையற்ற தனிப் பங்கு பெற்ருக வேண்டும். அதாவது திராவிடநாட்டை அந்நாட்டுக்கும், மொழிக்கும், அதன் பண்புக்கும் முரண்பட்ட பண்புருவற்ற இந்தியப் பரப்பிலிருந்து பிரித்து, தனி உரிமை நாடாக, விடுதலைப் பெருவாழ்வுக்குரிய நாடாக வழி வகுக்க வேண்டும். இவற்றைச் செய்யக் கிளர்ந்தெழுகின்ற மாபேரியக்கமே திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட இயக்கத்தின் புது மலர்ச்சிப் பூந்துணர், திராவிட இனத்தின் மறுமலர்ச்சிக்கொடி! அது தமிழகம் தன்னுரிமை பெற, தமிழினம் அல்லது திராவிடம் தனி வாழ்வும், தனி ஆட்சியும் மேற்கொள்ள, உலக நாகரிகம் வளர்க்கும் உயர் நாட்டினங்களிடையே திராவிட நாடு தனக்குரிய நற்பங்கு பெற உழைத்து வருகிறது, மக்களை ஊக்கி வருகிறது!

விழுந்து கிடக்கும் உருவிலாப் பரப்பிலே, அது பகுத்தறிவுக் கண்கொண்டு கண்டு சுட்டிக் காட்டும் பொன்னுருவே திராவிட நாடு. வரலாற்றின் துணைகொண்டு பண்பும் எல்லையும் விளக்கி, உலக நாகரிகத்தின் போக்குக்கொண்டு உரிமை முழக்கமிட்டு, வருங்கால நோக்கி, உயிர்ப்பூட்டி அது எழுப்பி வரும் தேசிய ஆர்வத்துக்குரிய நிலைக்களமே திராவிட நாடு.

தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழ்ப்பண்பு-இவை உயிர்ப்புடன் நிலவி, தங்கு தடையின்றி வளர்ந்து உலக நாகரிகம் வளர்த்து வந்துள்ள, வளர்க்க இருக்கிற இடமே திராவிட நாடு. இன்று அதுஇருக்குமிடத்தையே நாம் உலகப் படத்தில் காணமுடியாது. அயலினங்களின் உருவிலாப் பரப்பிலே அதுஇருந்து வாழ்ந்து, கடலுலகும், நிலவுலகும் ஆண்ட தடங்களை மட்டுமே அதில் காணலாம். ஆனுல் உலகங் கண்டு தமிழகம் காணு அயலினக் கட்சிகளாகிய கம்யூனிஸ்டுகளும், சோஷலிஸ்டுகளும், உருவிலா நூற்றுக்கணக்கான அயலினப் பரப்பாகிய 'மீந்த இந்திய யூனியன்' கண்டு தமிழகம் காணமுடியாத அயலினக் கட்சிகளாகிய காங்கிரசும், 'பிரஜா சோஷலிஸ்டுக்கட்சியும், தமிழரசுக் கட்சியும் 'எங்கே திராவிடநாடு' 'எங்கே திராவிடநாடு' என்று துடித்து ஏங்குகின்றன. எங்கே வரலாற்றில் காட்டு, சொல்லாராய்ச்சிக் களத்தில் சென்று விளக்கு என்று தலைவர்களுக்கு அறைகூவல் விடுத்து, அறிஞர்களுக்கு அழைப்பிதழ் அனுப்பி, மககளை அத்துறையில் விழிப்படையும்படி ஊக்கி வருகின்றன. தெரியாத மக்களுக்கும் தெரிவிக்க உதவும் இவ்அறியாத மக்கள் கேள்விக்குத் திராவிட இயக்கம் நன்றி தெரிவிக்கும் கடப்பாடு உடையதே என்னலாம்.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலம்வரை எவருக்கும் தலை வணங்காமல் உலகில் தனியாட்சி செலுத்திய மாநிலம் திராவிடநாடு. தென் திசையரசர் வடதிசையில் படையெடுத்துஅதை அடிப்படுத்தியதுண்டு-நிலந் தரு திருவிற் பாண்டியன், ஆரியப் படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன், இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன், சேரன் செங்குட்டுவன், கரிகாற் சோழன், ஆந்திரப் பெரும் பேரரசர், கலிங்கப் பெரும் பேரரசர், சோழப் பெரும்பேரரசன் இராசேந்திரன் ஆகியோர் வரலாறுகள் இதற்குச் சான்று. ஆனுல் வடதிசையரசர், பேரரசர் எவரும் திராவிடத்தின் வட எல்லையில்கூட நெடுங் காலம் விளையாடியதில்லை. அசோகன் கலிங்கம் கடந்ததில்லை, சோழப் பேரரசர் கலிங்கம் கடந்து கங்கையும் கடாரமும் அடிப்படுத்தியதுண்டு. கனிஷ்கன் கங்கை கடந்ததில்லை, சேரன் செங்குட்டுவன் கங்கை கடந்துகனகவிசயரை-கனிஷ்கனையும் அவன் கூட்டாளியையுமே-கல் சுமக்க வைத்தான். ஹர்ஷன் விந்தம் கடந்ததில்லை, ஆனுல் விந்தம் கடக்குமுன் தென்னக மாண்ட புலிகேசி ஹர்ஷனையும், தமிழக மாண்ட பல்லவன் நரசிம்மன் அந்தப் புலிகேசியையும் வென்று மண் கொண்டனர்!

அலாவுதின் கில்ஜி, முகமது பின் துக்ளக் விந்தம் கடந்த அன்றே தம் பேரரச வாழ்வு இழந்தனர். அவர்கள் வட திசையை எவ்வளவு எளிதில் கிழடக்க முடிந்ததோ, அவ்வளவு எளிதில் விந்த எல்லையையே கடக்க முடியவில்லை. அவுரங்கசிப் காலம்வரை நாலு பேரரசர் முயற்சி

— 7ம் பக்கம் —

சிந்தனையாளர் கழகம்

ஆயிரம்விளக்கு

சென்னை-6.

சிந்தனையாளர் கழகத்தின் சிறப்புக்கூட்டம், கழகக்கட்டிடத்தில் 5-10-57 அன்று மாலை 6-30 மணிக்கு நடைபெறும். திரு. மு. சாமிநாதன் தலைமை வகிப்பார்.

'உலக சிந்தனையாளர்கள்' என்ற பொதுத் தலைப்பின்கீழ் - தோழர் **எஸ். எஸ். தென்னரசு** அவர்கள் **'காந்திக்குப் பெரியவன்'** என்ற பொருளிலும், தோழர் **தி. சு. கிள்ளிவளவன்** அவர்கள் **'எம். என். ராயும் பகுத்தறிவு இயக்கமும்'** என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றுவார்கள். மற்றும் பலர் கலந்து கொள்வர்.

இளங்கோவும் பாரதியும்!

“காலந்தான் கவிஞனை உருவாக்குகிறது” என்றான் ஒரு மேனாட்டு அறிஞன். காலம் உருவாக்கித் தந்த கோலத் தமிழ்க் கவிஞர் பெருமக்களே இளங்கோவும் பாரதியும். கி. பி. இரண்டாம் நூற்றாண்டுக் கவிஞன் இளங்கோ எங்கே? நாம் வாழும் இவ்விருபதாம் நூற்றாண்டுக் கவிஞன் பாரதி எங்கே? இவ்விருவருக்கும் எப்படி ஒற்றுமையுண்டு? எந்த வகையில் சம்பந்தமுண்டு? என்றெல்லாம் பலப்பல எண்ணங்கள் தோன்றியிருக்கக்கூடும் இத்தலைப்பைக் கண்டவுடன். ஆம்! உண்மைதான்; இளங்கோவுக்கும் பாரதிக்கும் ஒற்றுமை இல்லைதான் காலத்தால். ஆனால் கருத்தின் திறத்தில் இருவரும் ஒற்றுமையுடையவர்களே.

இளங்கோவுக்கும் பாரதிக்கும் இடையே உள்ள கால வேறுபாட்டை ஒருபுறம் ஒதுக்கி வைத்து விட்டு, ஆய்வுக் கண்கொண்டு, இளங்கோ யார்? பாரதி யார்? என்பதையும், முல்லைக்காடு மணக்கும் முத்தமிழ் நாடும் மூவர் தமிழும் இளங்கோவால் அடைந்த பலன் யாது? பாரதியால் அடைந்த பலன் யாது? என்பவைகளை நாம் காண வேண்டும். அப்பொழுதுதான் இருவரும் எவ்வகையில் ஒற்றுமையுடையவர்கள் என்பதை அறிய முடியும்.

இளங்கோ யார்? ‘நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தை’ இயற்றிப் பெருமை பூண்ட பெருந்தகை, செஞ்சொற் சிலம்பை இயற்றுவித்த பெருமைக்கு முதற் காரணமாக விளங்குபவர், விளங்கெழு கூலவாணிகன் சாத்தனாரே. பேரியாற்றங்கரையிலமர்ந்து கார்தவழும் நீலமலைகளின் வனப்பைக் கண்டு, இயற்கை அன்னையின் எழிலையெல்லாம் உண்டுகொண்டிருந்த நேரத்திலேதான், நாட்டின் காவலனும் செங்குட்டுவனைக் காண வந்த காட்டின் காவலர்களாம் கானவர்கள் வேங்கை மரத்தடியில் தாங்கள் கண்டு வந்த மங்கையொருத்தியைப்பற்றிக் கூறினர். அதுபோது அருகிருந்த அருந் தமிழ்ப் புலவன் சாத்தனார், அம்மங்கை கண்ணகி என்பதையும், அவள் புகாரில் வாழ்ந்த வகையினைப்பற்றியும், மதுரையம்பதியில் அவளது கணவன் கொலைக்களப்பட்ட செய்தியினையும், சேர நாட்டிற்கு வந்த வரலாற்றினையும் விளக்கமாக இளங்கோவுக்கும், செங்குட்டுவனுக்கும் எடுத்துக் கூறுகிறார். அதோடு நில்லாது, இளங்கோவை நோக்கி அக்கற்பின் திருமகளாம் கண்ணகியின் வரலாற்றினை வண்டமிழ்க் காவியமாக - முத்தமிழ்க் காப்பியமாக- இயற்றும்படி கேட்டுக்கொள்கிறார். அதற்கிணங்கவே இளங்கோவும், “நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்” என்று கூறி சிலப்பதிகாரத்தை இயற்றியருளினார்.

‘கற்புடைய பெண்டிரை உலகோர் உயர்த்திப் போற்றுவர். அறநெறியிலிருந்து தவறியவன் அரசனே ஆனாலும் அழிந்து படுவான். ஊழ்வினை இப்பிறவியில் தன் பயனை அளிக்கும்.” என்ற இம்முப்பெருங் கொள்கையினை விளக்க வேண்டியதேதான் இளங்கோவடிகள் சிலம்பை இயற்றினார். இக்கூற்றிலிருந்துதான் இளங்கோவடிகளின் உண்மையுள்ளத்தைக்காண முடிகிறது. இம்மூன்று கொள்கைகளும் தமிழ்ப் பெருமக்களின் கொள்கைகளாகும்; தமிழர் பண்பாட்டின் உயிர் நாடிகளாகும். இம்மூன்று கொள்கைகளையும் உலகுக்கு அறிவுறுத்தவேதான் இளங்கோ சிலம்பை இயற்றினாரெனத் தெரிகிறது. தன்னுடைய அறிவின் சிறப்பையோ, புலமையின் பொலிவையோ வெளிக்காட்டி உலக மக்களின் பரிசைப் பெற வேண்டும் என்ற தன்னலத்தை முன்னிறுத்தி சிலம்பை இயற்றவில்லையென விளங்குகிறது.

அத்தகைய எண்ணம் அப்பெருமகனுக்கிருந்திருந்தால் கம்பனைப் போல ஒரு இராம காதையை இயற்றிப் பெருமையைத் தேடிக் கொண்டிருக்க முடியும்; வில்லிபுத்தூராரைப்போல மகா பாரதத்தை இயற்றி இருக்க முடியும். தமிழையும், தமிழ்ப் பண்பாட்டையும் மற்றவர்களிடம் அடகு வைத்துப் புகழ் பெற விரும்பவில்லை இளங்கோ. தமிழ்ப் பண்பாட்டைப் பாதுகாக்கும் வகையிலே, உலகத்தோர்க்கு அறிவுறுத்தும் வகையிலேதான் சிலம்பிலே ஒரு தமிழ் மகனையும் தமிழ் மகளையும் நடமாட விட்டிருக்கிறார்.

இல்லையென்றால் ஒரு இராமனையோ. ஒரு கிருட்டினனையோ, ஒரு இலக்குவனனையோ, ஒரு சீதையையோ, ஒரு திரௌபதையையோ நடமாட விட்டிருப்பார்.

நூலை எழுதப் புகுமுன்னரே தமிழர்களின் இறை வணக்கத்தை- இயற்கை வணக்கத்தை- “ஞாயிறு போற்றுதும்; ஞாயிறு போற்றுதும்” என்ற வரிகளிலே விரித்து வைக்கிறார். தமிழ்நாட்டிலே பிறந்த எந்தப் பெண்ணும் மாடனையும், காடனையும், வேடனையும் வணங்காள் கொண்ட கொழுநனையே வணங்குவாள் என்பதை கண்ணகியின் வாயிலாக பல இடங்களிலே விளக்கியுள்ளார். கற்பு நெறியே பெண்களின் அணிகலன்என்பதை விளக்கவே மாதவியையும், கோப்பெருந்தேவியையும் படைத்துக் காண்பித்துள்ளார். இறைமுறை பிழைத்தவன் கொற்றவன் ஆனாலும் அழிந்து படுவான் என்ற கருத்தினை,

“யானோ அரசன்;
யானே கள்வன்
தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது
கெடுக என் ஆயுள்”

என்று பாண்டியன் நெடுஞ்செழியனையே கூற வைக்கிறார். தமிழர் தம் வீரம் மாற்றார்களால் பழிக்கப் படுவதை எந்தத் தமிழ் மகனும் கேட்டுக்கொண்டிருக்க மாட்டான். மாறுகச் சிங்கமாக மாறுவான் என்பதை செங்குட்டுவனின் வடநாட்டுப் படையெடுப்பின் மூலம் விளக்குகிறார்.

இவ்வாறு சிலப்பதிகாரத்தின் முதற் காண்டத்திலிருந்து இறுதிக் காண்டம் வரை, முதற் காதையிலிருந்து இறுதிக் காதை வரை, ஏன்? முதல் வரியிலிருந்து இறுதி வரி வரை தமிழர் தம் பண்பாட்டின் மணங் கமழ்வதைக் காணலாம். தமிழர்தம் கொள்கைகள் ஒளிவிட்டு மிளிர்வதைக் காணலாம்.

அடுத்து பாரதியார்? என்பதைக் காண்போம். ‘பாட்டுக்கு ஒரு புலவன் பாரதி! ‘நீடுதுயில் நீக்கப் பாடி வந்த பெரும்புலவன். செந்தமிழ்ச் சிந்துக்குத் தந்தை: பாட்டுலகப் புரட்சி வீரன்!

-இத்துணை பட்டங்களையும் பெற்றவன் பாரதி ஒருவன்தான்.

முச்சங்கம் வைத்து மொழி வளர்த்த காலந் தொட்டு மொழிக்காக எச் சங்கமும் இல்லாத இக்காலம் வரை, தமிழ் மொழியினைப் பற்றிப் பாடிய புலவர் பெருமக்கள் ஏராளம், ஏராளம். விண்ணாட்டு அமிழ்தத்தை இந்நாட்டிலே கொண்டு வந்து என் கையில் கொடுத்து உனக்கு இந்த அமிழ்தம் வேண்டுமா? அல்லது அருந்தமிழ் வேண்டுமா? என்று கேட்டால், நான் விண்ணவர்தம் அமிழ்தத்தை விரும்பேன், தென்னவர் தம் தமிழையே விரும்புவேன் என்று பாடினான் ஒரு புலவன்.

“இருந்தமிழே உன்னால்
இருந்தேன் —இமையோர்-
விருந்தமிழ் தம் என்றாலும்
வேண்டேன்.”

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை போன்றவர்கள் தமிழை பரம் பொருளுடன் ஒப்பிட்டுச் சிறப்பித்துப் பாடிச் சென்றனர். கம்பன் “என்றுமுள தென்றமிழ்” என்று சிறப்பித்துச் சென்றான். இவர்கள் அனைவரும் தமிழின் சிறப்பை, தமிழின் எழிலை, தமிழின் வனப்பை, தமிழின் தொன்மையைப் புகழ்ந்து அவ்வளவோடு நின்று விட்டார்கள். பாரதியும் இவர்களைப்போலத்தான், “யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்” என்று தமிழைப்புகழ்ந்து பாடியுள்ளான். ஆனால் புகழ்ந்ததோடு மட்டும் நின்று விடாமல் தமிழ் மொழியை எப்படியெப்படியெல்லாம் மேலும் வளர்க்கவேண்டும்? எப்படியெப்படியெல்லாம் பகை மொழிகளின் படையெடுப்புகளிலிருந்து பாதுகாக்கவேண்டும்? எப்படியெப்படியெல்லாம் தமிழ் நாட்டிலும் உலகிலும் பரப்பவேண்டும் என்பதற்கான வழி வகைகளையும் கூறியுள்ளான். முன்னவர்கள் செய்யத் தவறிய, மறந்த செயலினை பாரதி செய்தான். அதன் விளைவே இதோ காணும் கருத்து நிறை கவிதைச் செல்வங்கள்:

“சென்றிடுவீர் எட்டுத் திக்கும்
—கலைச்
செல்வங்கள் யாவுங்
கொணர்ந்திங்கு சேர்ப்பீர்”

“பிறநாட்டு நல்லறிஞர்
சாத்திரங்கள் தமிழ் மொழியிற்
பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய
புதுநூல்கள் தமிழ்மொழியில்
இயற்றல் வேண்டும்.”

“சொல்லில் உயர்வு
தமிழ்ச் சொல்லே—அதைத்
தொழுது படித்திடடி பாப்பா.”

“சேமமுற வேண்டுமெனில்
தெருவெல்லாம் தமிழ் முழக்கம்
செழிக்கச் செய்வீர்.”

“தேமதுரத் தமிழோசை
உலகமெலாம் பரவும் வகை
செய்தல் வேண்டும்.”

ஒண்டமிழ்த்தாய் முன்னேற்றம் ஒவ்வொன்றும் தமிழர்களின் முன்னேற்றம் என்ற கருத்தைப் பரப்பி, மக்களிடம் மொழிப்பற்றை உண்டாக்கியவன் பாரதி. அதோடு தமிழ் மொழிக்கு வருந் தீமை தனக்கு வருந் தீமை என்று எண்ணிப் பாடுபட்டவன் பாரதி.

இளங்கோவும் பாரதியும் தமிழ்த் தாயின் அருமை மக்கள்; இளங்கோ மூத்த பிள்ளை என்றால் பாரதி இளைய பிள்ளை. இளங்கோ தமிழ்ப் பண்பாட்டினைப் பாதுகாக்க நூல் செய்து புகழைப் பெற்றான். பாரதி பைந்தமிழைக் காக்கப் பாடுபட்ட புரட்சிப் புலவன். எனவே இளங்கோவும் பாரதியும் இரு வேறு முனைகளிலிருந்து தாய்த் திருநாட்டையும், தமிழன்னையையும் காப்பாற்றியவர்கள். அவர்கள் தமிழின் பாதுகாவலர்கள்.

—அறவாணன்.

வெண்பாப் போட்டி-6.

ஊடல் வெண்பா

அகத்துறையில், ஊடல் முறைப்படி விருப்பம்போல் எழுதலாம். ஊடல், ஒரு நாடகம்போல் அமைதல் வேண்டும். விரும்பினால், வெண்பாவின் கடைசி இரு வரிகளாக, ஒரு திருக்குறளையே முழுக்க எடுத்தாளலாம், (திருக்குறள் சோமேசர் வெண்பாவைப்போல.)

முடிவு தேதி 19-10-57.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.



மதுரை மசூதி

இருநூறு ஆண்டுகளுக்குமுன் தமிழகத்தின், தென்பகுதியைக் கொந்தளிக்கச் செய்த ஒரு பெருங்கிளர்ச்சியின் மூலக் கதை இந்தப் பள்ளிவாசலுக்குள் புதையுண்டு கிடக்கிறது. இன்றும் இந்தப் பள்ளிவாசலை மதுரையில் காணலாம். ஆனால் அதன் வரலாறு அநேகருக்குத் தெரிந்திருக்காது.

உலகச் சரித்திரத்தைப் புரட்டினால் கொடிகட்டி ஆண்ட மன்னர்களின் மாளிகைமுதல் இடிந்து கிடக்கும் கோட்டை கொத்தளங்கள் வரை ஒவ்வொன்றுக்கும் ஒரு வரலாறு கிடைக்கிறது.

பசியே எடுக்காதாம்! பார்த்துக் கொண்டே இருக்கலாமாம் "தாஜ்மஹாலை"! அது ஒரு சோகக் கதையை சொல்லிக் கொண்டிருக்கிறது! புதைபொருள் ஆராய்ச்சி நிபுணர்களுக்கு வேலை கொடுத்துக் கொண்டிருக்கும் "ஹரப்பா, மொகஞ்சதரோ" அது ஒரு வரலாற்றை கக்கிக்கொண்டிருக்கிறது! கயத்தாறு கட்டபொம்மன் வரலாற்றை கூறுகிறது. துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப்பட்டிருக்கிற புளியமரம் மருது சகோதரர்களை தன் அரவணைப்பிலே வைத்து காப்பாற்றிய பெருமையை சொல்லிக் கொண்டு நிற்கிறது காளையார் கோவிலில்! இப்படித் தன்னிடத்திலேயும் ஒரு வரலாற்றை புதைத்து வைத்துக்கொண்டிருக்கிறது, மதுரையிலே இருக்கிற **"கான் சாகிப் கம்மந்தான் மசூதி."**

வியாபாரம செய்ய வந்த ஆங்கிலேயர்கள் இந்தியாவை அடிமைப்படுத்தினார்கள். அப்பொழுது தமிழகத்தை ஆண்டு கொண்டிருந்த நவாப்புகளும் பாளையக்காரர்களும் தங்களுக்குள் ஒற்றுமையில்லாதிருந்த நிலையை பயன்படுத்திக் கொண்டு அவர்களை தனக்கு கப்பம் கட்டி வரும் அடிமை அரசர்களாக ஆக்கினான் ஆங்கிலேயன். அவர்களில் ஒருவர் தான் அப்பொழுது மதுரையில் ஆட்சி நடத்திவந்த கான்சாகிப் கம்மந்தான்!

கான்சாகிப் கம்மந்தான், மதுரை மக்களின் அன்பையும் ஆதரவையும் பூரணமாகப் பெற்றிருந்தார்.

நாட்டையும், நாட்டு மக்களையும் குறித்து கவலை கொள்ளாத கர்நாடக நவாப்பான முகம்மதலியோ மதுரைச் சீமையில் தன்கொடியே பறக்கவேண்டுமென்றான். கப்பத் தொகையும் தனக்கே முதலில் வரவேண்டும் பின்னரே ஆங்கிலேயர் அதனைப் பெறலாம் என்று கம்மந்தானுக்கு செய்தி அனுப்பினான். இதை யறிந்த சென்னை கவர்னர் 'பிகட்' என்பவர் அப்படியே செய் என்று கம்மந்தானுக்கு பகிரங்கமாக ஒரு கடிதம் எழுதி விட்டு மற்றொரு கடிதத்தில் கும்பினியர்களின் கொடிதான் எங்கும் பறக்க வேண்டுமென்றும் கும்பினியரின் காரியதரிசிக்கே நேராகப் பணத்தை அனுப்பி விடுமாறும் ரகசியமாக எழுதினார். பிகட்டின் கடிதப் படியே நேராக ஆங்கிலேயருக்கு கப்பத்தை அனுப்பி வந்தார் கம்மந்தான்.

இதையறிந்த முகம்மதலிக்கோ ஆங்கிலேயரின்மீது அடங்காக் கோபமேற்பட்டது.

ஆனால் அதை வெளிப்படையாக காட்டிக் கொள்ள தைரியமில்லை. பதவி பறி போய் விடும் என்ற எண்ணத்தில் ஊமையாக இருந்தான். ஆனாலும் உள்ளத்திலே ஏற்பட்டிருக்கிற குமுறலை, கம்மந்தானை பழிவாங்குவதின் மூலம் தீர்த்துக்கொள்ள முடிவு செய்தான்! அதற்கு தன் தமையனை 'மாபூஸ்கானை' தயார்படுத்தினான். மதுரைச் சீமையிலே கொள்ளையடிக்கவும், கொலை செய்யவும் தந்திரமாக கம்மந்தானுக்கு விஷமிட்டுக் கொள்ளவும் திட்டம் தீட்டிக் கொடுத்தான. இதையறிந்த கம்மந்தான் முன்னெச்சரிக்கையாக தன் படைகளை நகருக்குள் அனுப்பி ரோந்து வரச் செய்து மாபூஸ்கானை உள்ளே நுழையவிடாதபடி விரட்டியடித்து முகமதலியின் நச்சுத் திட்டத்தை பொடிப் பொடியாக்கினார். இச் செயல் ஏனோ ஆங்கிலேயர்களுக்கு ஆத்திரத்தை மூட்டியது. முறை தவறாமல் கப்பம் கட்டியும் நாட்டைத் திறமையோடும் ஆண்டு வந்த கம்மந்தானைக் கைவிடவும் முகம்மதலியிடம் காட்டிக் கொடுக்கவும் ஆங்கிலேயர் தீர்மானித்தனர்.

நீ நவாப்பின் அடிமை! இனி கப்பத்தை நவாப்பிடந்தான் செலுத்த வேண்டும், அவன் கட்டளைப்படிதான் நீ நடக்க வேண்டும்-என்று திடீர் உத்திரவு பிறப்பித்தனர்.

ஆங்கிலேயர்களின் இந்த எதிர்பாராத அறிவிப்பு, கம்மந்தானுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அதிகாரத்தை ஜன்மப் பகைவன் கையில் ஒப்படைப்பதா? நாடு நவாப்புக்கு உட்பட்டால் மக்களை வாட்டிப் பணம் பறிக்க வேண்டுமே என்று பதைபதைத்தார். பணத்துக்கு ஆசைப்பட்டு நம்மையும் நாட்டு மக்களையும் ஆங்கிலேயர் காட்டிக் கொடுத்துவிட்டனரே என்று துடிதுடித்தார்! பூத்துக் குலுங்கியிருக்கும் நந்தவனத்தை, திடீரென்று வரும்புயல் நாசப் படுத்திவிடுவதுபோல் சீராகி வரும் மதுரை சீர்குலைந்து போகுமே என்று மனம் வருந்தினார்! கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தார்! மானத்தை துறந்து சிரம் தாழ்த்தி கரம் கூப்பி முகம்மதலியின் கீழ் குற்றவேல் புரிவது கம்மந்தானின் பரம்பரைக்கே இழுக்கு என்று எண்ணினார். இனி யாருடைய கட்டளையையும் எதிர் பார்த்து நடக்கப் போவதில்லை. தோற்றால் தூக்குமேடை கிட்டுமெனவும், வெற்றி பெற்றால் பதவி நிலைக்குமெனவும் அவருக்குத் தெரியும். கம்மந்தான் வாழும்பொழுதும் வீரனாக வாழ்ந்தான. சாகும்பொழுதும் வீரனாகவே மடிந்தான் என்ற புகழாவது இருக்கட்டும்-என்ற முடிவுக்கு வந்தார். முடிவையும் திட்டவட்டமாக ஆங்கிலேயருக்கு எழுதி அனுப்பினார்.

நெறித்த புருவத்தோடு கடிதத்தைப் படித்தனர். ஆங்கிலேயர்கள். ஒவ்வொரு வார்த்தைகளும் உள்ளத்தில் நெருஞ்சி முள்ளாக குத்தியது. வேட்டுச் சத்தம் கேட்டால் நாட்டைவிட்டே ஓடிப் போகும் கம்மந்தானுக்கு எங்கிருந்து வந்தது இவ்வளவு தைரியம், நினைத்தால் மூட்டைப் பூச்சியை நசுக்குவதுபோல் நசுக்கி விடலாம் அதற்கு நாம் ஏன் போகவேண்டுமென்று கருதி திருவாங்கூர் மன்னனை ஏவிவிட்டனர். ஆங்கிலேயர்கள் உடனே அவனும் படை கொண்டு திருநெல்வேலியில் புகுந்தான் போர் தொடுக்க. அது கண்ட கம்மந்தான் தன் படைகளுடன் சென்று 1763-ம் ஆண்டு ஜனவரி 9-ந் தேதியன்று கேரள வீரரை திருநெல்வேலியிலே முறியடித்தார். அதன் பின்பு தமது நாட்டிலே பறந்துகொண்டிருந்த ஆங்கிலேயர்களின் கொடிகளையெல்லாம் பிய்த்தெறிந்து தீயிலிட்டுப் பொசுக்கினார்!

இச் செயல் ஆங்கிலேயருக்கு ஆத்திரத்தை மூட்டியது. ராமநாதபுரம், சிவகெங்கை அரசர்களின் உதவியுடனும் நவாப்பின் உதவியுடனும் கம்மந்தானை எதிர்க்க ஆங்கிலேயர் படை திரட்டிக் கொண்டு வந்தனர்.

ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை ஒழிப்பதற்கு சமயம் பார்த்துக் கொண்டிருந்த பிரெஞ்சுக்காரர்கள் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு கம்மந்தானோடு சேர்ந்து ஆங்கிலேயரை எதிர்த்தார்கள். ஆயிரம் குதிரை வீரர்கள், மூவாயிரம் சிப்பாய்கள், இந்தப் பக்கம். ஆனால் ஆங்கிலேயர் பக்கமோ: 1600 ஐரோப்பிய வீரர்களும் 2000 குதிரை வீரர்களும் 4000 சிப்பாய்களும் பல்லாயிரக் கணக்கான கள்ளர்களும் இருந்தார்கள். ஒரு வருடம் போர் தொடர்ந்து நடைபெற்றது. இதில் ஆங்கிலேயரின் பக்கமே அழிவு அதிகம். ஆனாலும் இந்த ஒரு வருட காலமாக கம்மந்தான் கோட்டையை விட்டு வெளியில் வரவே இல்லை. போர் தொடர்ந்து நடைபெற்றதால் போக்குவரத்துக்கள் நின்று விட்டன. கோட்டைக்குள்ளே உணவுப் பொருள்கள் தட்டிவிட்டன. வீரர்கள் பட்டினியால் வாடினர். இதைக் கண்டு சற்று கலங்கினார் கம்மந்தான். இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு சீனிவாச ராவ், பாபா சாகிப் என்ற கம்மந்தானுடைய நெருங்கிய நண்பர்கள் இருவர் வெள்ளைக்காரர்களிடம் பணம் பெற்றுக்கொண்டு கம்மந்தானுக்கே துரோகம் செய்ய ஆரம்பித்தார்கள்.

ஒரு நாள் மாலை கோட்டைக்குள் கம்மந்தான் தொழுது கொண்டிருக்கையில் அவ்விரு துரோகிகளும் பின்புறமாக வந்து கம்மந்தானை கட்டிப் போட்டார்கள். துரோகிகளிடமிருந்து. இனித் தப்ப முடியாது என்று தெரிந்து கொண்ட கம்மந்தான் என்னைக் கட்டிப் போட்ட நல்லவர்களே என்னை ஆங்கிலேயரிடம் ஒப்படைத்து விடாமல் நீங்களே வெட்டிப் போட்டு விடுங்கள் என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். துரோகிகள் அதற்கு இணங்கவில்லை.

1764-வருடம் 15-ந் தேதி திங்கள் மாலை ஐந்து மணிக்கு நவாப்பின் உத்திரவுப்படி திண்டுக்கல் சாலையில் உள்ள மாமரத்தில் கம்மந்தானைத் தூக்கிலிட்டனர்.

தோற்றால் தூக்குமேடை வெற்றி பெற்றால் சிம்மாசனம் என்று கூறி வந்த கம்மந்தான் கண்மூடும் வரையிலும் கம்பீரமாகவே இருந்தார். அவர் பிரேதத்தை பல துண்டுகள் செய்து தலையைத் திருச்சிராப் பள்ளிக்கும் கைகளை திருநெல்வேலிக்கும் அனுப்பி விட்டு உடலை மட்டும் மதுரையைச் சார்ந்த **சம்மட்டி** புரத்திலே அடக்கம் செய்தார்கள்!

பிறகு நாற்பது ஆண்டுகள் கழித்து ஷேக் இமாம் என்பவர் அந்த இடத்திலே ஒருமசூதியைக் கட்டினார் அதற்கு **"கான் சாகிப் கம்மந்தான்"** பள்ளிவாசல்என்று பெயர் வைத்தார். மதுரையில் இன்றும் நீங்கள் அதைப் பார்க்கலாம்.

—**தினகரன்**

— 4ம் பக்கம் தொடர்ச்சி —

யின் முடிவு-முகலாயப் பேரரசின் வீழ்ச்சியாகவே முடிந்தது!

தென்திசை வடதிசையை வெல்ல முடிந்தது, வடதிசைதென்திசையை என்றும் அணுக முடிந்ததில்லை. அதுமட்டுமன்று, வட திசையின் வரலாறு ஓயாத அயலினம், அயலரசர் படையெடுப்பாகவே உள்ளது. தென் திசையில் அந்த அயலினத்தவர் நிழலும் படவில்லை. அறவோர் உருவில், புலவோர் உருவில், விருந்தினர் வுருவில், இரவலர் உருவில் வந்தாலன்றி, தென்திசை அணுகியவர் எவரும் இலர்!

ஆரியர், பாரசீகர், கிரேக்கர், குஷாணர், பார்த்தியர், ஊணர், அராபியர், ஆப்கானியர், முகலாயர் இவர்கள் படைபெடுப்புக்களின் வரலாறே வட இந்தியாவின் வரலாறு. திராவிடர் பழம் பண்பாட்டின் சிதைவுடன் இவர்கள் அயற் பண்பாடு கலந்த கலவைப் பண்பாடே வட இந்தியப் பண்பாடு என்னும் அவியல்! ஆனால் தென் திசை இந்த இனங்கள் எவற்றின் படையெடுப்புக் கோ குடியெழுச்சிக் கோ என்றும் ஆட்பட்டதில்லை. அவற்றுடன் சரிசம அடிப்படையை வாணிக, கலைத் தொடர்பின்றி வேறு தொடர்பு வைத்துக்கொண்டதில்லை.

டேரியஸின் பாரசிகப் பேரரசிலும், அலெக்சாண்டரின் கிரேக்கப் பேரரசிலும், கனிஷ்கரின் குஷாணப் பேரரசிலும் தில்லிமா நகரை உட்கொண்ட சிந்து கங்கைப் பெரு வெளி, ஒரு மாகாணமாய் அடங்கியிருந்ததுண்டு. பார்த்திபபல்லவரும் ஊணரும் அப்பரப்பெங்கும் சூறையாடிப் பேரரசுகளும் சிற்றரசுகளும் நிறுவி நூற்றுண்டுக் கணக்காக ஆண்டதுண்டு. ஆப்கானியர், முகலாயர் ஆகிய அயலினத்தவர் பிரிட்டிஷ் ஆட்சிவரை அதைத் தம் வேட்டைக் களமாக்கிக்கொண்டிருந்தனர்.

வடநாடு அடிமைப் பரப்பாக அல்லல் பட்டுக்கொண்டிருந்தஇந்த இரண்டாயிர ஆண்டுக் காலமும், தெற்கே திராவிடம் தனிச் செங்கோல் ஓச்சிக்கொண்டிருந்த காலம் ஆகும். உலகின் குடியேற்றக் களமாக வடதிசை நிலவிய அந்தக் கால முழுவதும், தென்னகம் மேலையுலகையும், கீழையுலகையும் தன் குடியேற்றக் களமாகவும், வாணிகக் களமாகவும் ஆக்கிக்கொண்டிருந்தது. தைமூரும், நாதர்ஷாவும், அகமதுஷா அப்துராணியும் அதைச் சூறையாடிக்கொண்டிருந்த அதே காலத்தில் தென்னுட்டவர் இலங்கையும், இந்துமா கடல் தீவங்களையும் தென் கிழக்காசியாவையும் படையெடுத்துச் சென்று திறை கொண்டு வீறுடன் ஆண்டனர். கனவில்கூடக் காளிதாசன்போன்ற சமஸ்கிருதக் கவிஞர்கள இரு கடற்கரைவரை நீண்ட வட திசைப் பரப்பையே பெரும் பேரரசின் எல்லையாகக் கொண்டிருந்தனர். அதையே உலகமாகவும் கருதினர். 'மாகடல் அளாவிய மாநில மன்னர்' (ஆசமுத்ர-க்ஷிதீசஃ) என்றும்,

'உனது ஒரு மாமலையரசு வட திசைக்கண் இமயம்-வளமுடன் கீழ் மேல் கடல்கள் மூழ்கி இடை உலகம்-அளக்கின்ற முழக்கோல் போல் கிடக்கின்ற தந்தோ!'

அஸ்த் யுத்தரஸ்யாம் திசி
தேவதாத்மா
ஹிமாலயோ நாம நகாதிராஜஃ
பூர்வாபரௌ வாரி நிதீ விகாஹ்ய
ஸ்திதஃ ப்ருதிவ்யா இவ
மானதண்டஃ

என்றும் அவன் கூறுவது காண்கிறோம். ஆனால் தமிழக அரசரோ இரு கடல் குளித்த தென்னகப் பெருநில அரசரையும், வளிமப்பம் தாக்கடக்கிய வளர்நிலை அரசையும், கடல் கடந்த கடற் பேரரசையும் வரலாற்றில் கண்டு பாடியுள்ளனர். அதுமட்டுமே! முத்தமிழ் நாடுகளான சேர, சோழ, பாண்டிய நாடாண்ட மன்னரையேஏழுலகாண்ட மன்னரென்றும், தமிழக வரலாறு காணுத புராணிகரைப் பாட வைத்தனர்! மூவரசருமே இமயத்தில் தமிழ்க்கொடிபொறித்து உலகாண்டவராதலால் மூவரசும் ஆண்டவரை மூவுலக அரசரென்றும், அலை எழு கடலை எழு கடலென்றும் உரைத்த தமிழ் வாய்மையைத் தமிழ்க் கற்பனை மாண்புணராத வடவர் அறியாது உழன்றனர்.



இந்தி எதிர்ப்பு நாள்

இந்தியப் பேரரசு தென்னகத்தின்மீது இந்தியைத் திணிக்கும் அநீதியை எதிர்த்து, 1957 அக்டோபர் 13, ஞாயிற்றுக்கிழமையை 'இந்தி எதிர்ப்பு நாளாக'க் கொண்டாடுமாறு தி. மு. கழகக் கிளைகளையும், துணை அமைப்புகளையும், தென்னுட்டின் நலனிலும், திராவிட மொழிகளின் நலனிலும் அக்கறை கொண்ட பிற அமைப்புகளையும் வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

அன்று இந்தி எதிர்ப்பு ஊர்வலங்கள்-பொதுக் கூட்டங்கள் ஆகியவற்றை மிகச் சிறப்பாக நடத்துவதோடு, இந்தியை எதிர்க்கும் தீர்மானத்தை நிறைவேற்றி அதன் ஒரு படியை இந்தியப் பேரரசின் உள் நாட்டமைச்சருக்கும், மற்றொரு படியை மாநில அரசியலாருக்கும், வேறொரு படியைத் தலைமைக் கழகத்திற்கும் அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

அமைதிக்குக் கேடு விளையாத வகையில், கண்ணியத்தோடும் - கட்டுப்பாட்டோடும் கடமையாற்ற வேண்டுகிறோம்.

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர் தி. மு. க.



பொதுவாழ்வில் பணியாற்றி, இலக்கியத்துப்
பொன்வீட்டில் இளைப்பாறப் புகுந்தகாலை
மதுக்கோப்பை கரத்திலேந்திக் குடியன்காணும்
மாருத கனவுலகம் காட்சியாகும்!
சதுராடும் மங்கையரின் பாதத்தோடு
சரியாகச் சேர்ந்தாடும் சிலம்பின் ஓசை
கதகதப்பை வாலிபரின் உளத்தி லேற்றிக்
கலக்குதல்போல் இலக்கியமும் கலக்கும் நெஞ்சை!

ஏன் வேண்டும் இன்பத்திராவிடம்?

திராவிட நாடு-பிரிவினைக் கொள்கை திராவிட இயக்கத்தின் மூலக்கொள்கையானவுடன் தமிழகத்தில் அதற்குப் பலமான எதிர்ப்பிருந்தது. படித்தவர்களுக்குக்கூட அந்தக் கொள்கை புதுமையாகப்பட்டது. பல முனைகளிலிருந்து எதிர்ப்புகள் கிளம்பின. கழகத்தின் தலைவர்கள், சொற்பொழிவாளர்கள் எதிர்ப்புகளுக்குச் சமாதானம் சொன்னுர்கள்; விளக்கம் தந்தார்கள்; ஆதாரங்கள் காட்டினுர்கள். அந்த நேரத்தில் கேட்ட கேள்விகளில் கண்ணை மூடிக்கொண்டு கேட்ட கேள்விகள் தான் அதிகம். ஆனால் இன்றைய தினம், மாற்றுக் கட்சியிலே உள்ள ஒரு சில நல்லவர்களால் உருப்படியான சந்தேகங்கள் கிளப்பப்படுகின்றன. அவைகளில் பெரும்பாலானவை இன்றைய ஆட்சி நிலையை-நேருவின் புகழை-நாட்டின் வரவு செலவை மையமாகக் கொண்டவையாகும். அப்படிப்பட்ட ஐயப்பாடுகளுக்கெல்லாம் பதில் தரும் வகையில்-கற்றேரும் மற்றேரும் புரிந்துகொள்ளும் வண்ணம் **'ஏன் வேண்டும் இன்பத்திராவிடம்?'** என்னும் அரசியல் விளக்க நூலை **'முரசொலி' மாறன் எம். ஏ.** தமிழகத்துக்குப் படைத்திருக்கிறுர்.

காங்கிரஸ் இயக்கம் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட காலத்தில், இந்தியாவின் ஒற்றுமை பற்றி எழுதப்பட்ட புத்தகங்களை காங்கிரஸ்காரர்கள் வேதப் புத்தகமாகக் கருதினுர்கள். தொண்டர்கள் அதையே ஆதாரமாகக் காட்டிப் பேசினுர்கள். அவ்வாறு காட்டப்பட்ட புத்தகங்களில் இனஉரிமைக்குப் பரிகாரம் இல்லை. அது எழுதியவர்களுக்குப் புரியாமலில்லை. புரிந்தது. எழுதினுல் அந்தப் புத்தகத்தை எழுதியதின் நோக்கமே பாழாகிவிடுமே! ஆனால் மாறன் எழுதியிருக்கும் இந்தப் புத்தகத்தில் எந்தப் பிரச்சினைக்கும் மறைவிடம் இல்லை. முடியரசு வேண்டுமென்போருக்கும், சர்வாதிகாரக் குடியரசுதான் தேவை என்போருக்கும், மக்கள் மனம் வைத்தால் பல நாடுகள் கொண்ட ஒரு கண்டம் ஒரே அரசியல் சட்டத்தின்கீழ் வாழமுடியும் என்னும் 'சுரணை மிகுந்த'வர்களுக்கும் இந்த நூல் அருமையான விளக்க நூலாக அமைந்திருக்கிறது. அறிஞர்களைச் சாட்சிகளாக்கி, பிரிவினையை வெற்றிகரமாக்கியிருக்கிறுர் ஆசிரியர். எந்தக் கேள்வியை எந்தக் கோணத்திலிருந்து யார் கேட்டாலும் புத்தகத்தில் பதில் கிடைக்கிறது. ஓரிரு இடங்களில் பதில் புதைந்து கிடக்கிறது.

புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்து, சில பக்கங்களைத் தள்ளிய பிறகு பல அரசியல் தலைவர்கள் நினைவுக்கு வருகிறுர்கள். நேரு வருகிறுர், டாங்கே வருகிறுர், ராமமூர்த்தி வருகிறுர், ம. பொ. சி. கூட வருகிறுர். புத்தகத்தைப் படித்து முடித்தவுடன், அவர்கள் எங்கோ மறைந்துவிடுகிறுர்கள். அவர்கள் கிளப்பிய - கிளம்பிக்கொண்டிருக்கும் வாதங்களெல்லாம் சொத்தையாகப் படுகின்றன. திராவிட நாட்டுப் பிரிவினை எவராலும் எந்தக் காலத்திலும் ரத்து செய்யமுடியாத ஒன்ருக நமக்குப் படுகிறது. கட்சிக்குப் புதிதாக வந்திருப்பவர்கள், மாற்றுக்கட்சிக்காரர்கள் இந்த நூலை அவசியம் படிக்கவேண்டும்.

பொன்மலை கு. பராங்குசம் அவர்களும், ஆரூர் கு. தென்னன் அவர்களும் இந்த நூலை அழகுற வெளியிட்டிருக்கிறுர்கள். கப்பிய இருளைப் போக்க காலைச் செம்பரிதி எழும்புவதுபோல் நூலின் முகப்பு எழில் மணக்க அமைந்திருக்கிறது.

வெளியீட்டகம்:
முத்துவேல் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி.
விலை ரூ. 1-50.

—1-ம் பக்கத் தொடர்ச்சி—

திரர் முத்துராமலிங்கம்’ என்று அன்னக்காவடி முதல், நாடகங்களில் ஆலோலம் ஓட்டும் வள்ளியம்மாள் வரை புகழ்ந்து பாடப் பெற்ற பசும்பொன்னர், ‘அடிகளை’ப்போல் நடமாடத் தொடங்கினர். யாருக்குமே சிரம்பணியாத அவரது சிரம் ‘விபூதி’க்குப் பணிந்தது; ஜெபமாலைக்குப் பணிந்தது. வீரத்தின் மொத்த உருவாக இருந்த அவருடைய கொத்து மீசை மறைந்தது. தேவர், தேசிகரைப்போல் உருகிக்கொண்டு பாட ஆரம்பித்தார். அவர் மதவாதியா, அரசியல் வாதியா என்ற சந்தேகம் தமிழ்நாடெங்கணும் பரவ ஆரம்பித்தது. காலம் ஓடியது. தமிழகம் அவரை மறந்து விட்டது.

அதன் பிறகு 1951-1952 ல் தேவரைப் பற்றிய பேச்சு அரும்பியது. காரணம் அது தேர்தல் காலம். முதுகுளத்தூர் தொகுதியில் அவர் போட்டியிட்டார். வெற்றி பெற்றார். எப்போதுமே அவர் இரண்டு இடங்களில் வெற்றி பெறுவதுண்டு. 1952-தேர்தலிலும் அவர் இரு இடங்களில் வெற்றிபெற்றார். அண்மையில் நடந்து முடிந்த தேர்தலிலும், அவர் இரண்டு இடங்களில் வெற்றிபெற்றார். இவ்வளவு செல்வாக்குப் படைத்த மனிதர், ஏன் பொதுவாழ்வில் வெற்றிபெற முடியவில்லை என்ற கேள்விக்குறிகள் நெடுநாளைக்கு நிற்கவில்லை; தேவரின் வெற்றிக்கு உண்மைக் காரணங்களை மக்கள் கண்டுபிடித்துவிட்டார்கள்.

கடந்த ஒரு மாத காலமாகத் தேவரின் பேச்சு அடிபடுகிறது. காஷ்மீர் பிரச்சினையில் ஷேக் அப்துல்லாவின் பெயர் அடிபட்டதைப்போல், செஞ்சீனப் பிரச்சினையில் நேருவின் பெயர் அடிபட்டதைப்போல் தேவரைப் பற்றிப் பத்திரிகைகள் எழுதுகின்றன. தேவர் அரசியலுக்கு வரவேண்டுமென்று பலர் விரும்புகிறார்கள். நாம் விரும்புவது, தேவர் தூய்மையான அரசியல் வாதியாக வரவேண்டும் என்பதுதான். தேர்தல் காலத்தில் முதுகுளத்தூர் வட்டாரத்தில் வெற்றிபெற்று வரும் தேவர், தமிழகத்தில் எந்தத் தொகுதியில் நின்றாலும் வெற்றி பெறும் ஜனநாயக வாதியாக வர வேண்டும்.

அதற்குத் தேவரிடம் தகுதிகள் இருக்கின்றனவா? ஏன் இல்லை! இருக்கின்றன. ஆனால் கொஞ்சம் மாற்றம் வேண்டும்.

வெள்ளைக்காரனை மிரட்டி மிரட்டிப் பழக்கப்பட்ட தேவர், இடைக்காலத்தில் அரசியலை விட்டு விலகி இருந்தமையால், அந்தப் பழைய முறையிலேயே பேசுவதைக் குறைத்துக் கொள்ள வேண்டும். அவருடைய பேச்சில் ஜனநாயக அம்சமே அதிகம் காணப்படவேண்டும்.

பார்ப்பனர்கள் பக்தர்களாக நடித்தார்கள்; பக்தியைக் கடைப் பொருளாகத்தான் மதித்தார்கள். தமிழர்கள் உண்மையாக பக்தியில் மிதந்தார்கள். அதனால் தான் பக்தர்களாக இருந்தாலும், பார்ப்பனர்கள் அரசியலிலும் வெற்றிபெற முடிகிறது. நாமோ பக்தி பக்தி என்று பேசி, உருகி யோகியாகவே மாறிவிடுகிறோம். ஆச்சாரியாரும் வைதீகர்தான்; தேவரும் பக்தர்தான். ஆச்சாரியார் பக்தியை அரசியலுக்குக் கொண்டுவரவில்லை. ஆனால் தேவர் எந்தப் பிரச்சினையையும் ஆண்டவனின் அருள் கலக்காமல் பேசுவதில்லை. புதுமையை விரும்பும் தமிழகம்-நல்ல அரசை நிர்மாணிக்க விரும்பும் தமிழகம்—இன விடுதலையைக் கோரும் தமிழகம் இந்த இடத்திலே தான் தேவரின்பால் நம்பிக்கை வைக்க மறுக்கிறது. தேவர் பழைய தேவராக வரவேண்டும் என்று ஆசைப்படுகிறது. போனவாரம் அவர் கைது செய்யப்பட்ட நேரத்தில் அருகாமையிலிருந்த டி. ஜி. கிருஷ்ணமூர்த்தியிடம் கொடுத்த உருத்துராக்கத்தையும், (திரு) நீறுப் பையையும் இனித் திரும்பவும் வாங்கக்கூடாது என்று எண்ணுகிறது. தேவர் அதன்படி செய்வாரா? **அமைதியும் ஆதாரங்களும் நிறைந்த ஏராளமான சொற்பொழிவுகளை நிகழ்த்தி, பாண்டிய நாட்டில் புதுப்பலம் பெறுவாரா?** கால ஓட்டத்தோடு இணைந்து அரசியல் அநாகரீகங்களை எதிர்த்துப் போரிடுவாரா?-தமிழகம் கேட்கிறது.

தேவர் இந்த நேரத்தில் தன்னை ஒரு புனிதமான அரசியல் வாதி என்று காட்டிக்கொள்ளத் தவறினால், இதுகாறும் அவர் நாட்டுக்கு ஆற்றியிருக்கும் தொண்டு பூரணத்துவம் பெற்றதாகாது.

- தென்னரசு.

பன்மொழிப்புலவர்
பொன்விழா நிதிச்

சிறப்புக் கூட்டம்

13-10-57 ஞாயிறு காலை 9 மணிக்கு சென்னை கோகலே மண்டபத்தில்

தலைவர் :
எஸ். எஸ். இராசேந்திரன்

சொற்பொழிவாளர்கள் :
சி. பி. சிற்றரசு-சீனத்துக் குரல்
டி. கே. சீனிவாசன்-சொல்லும் செயலும்
கண்ணதாசன்-உரமும் திறமும்

நன்கொடை :
ரூ. 2, 1, அணா எட்டு.

ஊ. பு. அ.
சௌந்திர பாண்டியனார்
நினைவுப் படிப்பகம்
சென்னை-7.

அக்டோபர் இதழ் வெளிவந்துவிட்டது !

முல்லை

இலக்கியத் திங்களிதழ்

ஆசிரியர் :-
கண்ணதாசன்

★ பன்மொழிப்புலவர் தரும்
இலக்கியமும் வாழ்வும்
— கட்டுரை

★ கண்ணதாசனின்
ஆட்டனத்தி-ஆதிமந்தி
— குறுங்காவியம்

★ முடியரசன் தீட்டிய
ஆவிகலந்த அழகி
— கவிதை

★ இளஞ்சேரன் எழுதிய
கன்னடியன் சண்டை
— கட்டுரை

இவற்றோடு

திருகுப்பூ !—சுவையான சம்பவங்கள் நிறைந்த குறுநாவல்.

ஏன் ?—கலீல் கிப்ரானின் கருத்துச் சாரம்.

குறி !—மீனவர் குலத்தில் அரும்பிய தேன் மொழியொருத்தியின் காதல் கதை.

தூது—தூதுச் சம்பவங்கள் கூறும் கட்டுரை.

மற்றும்

ஒரு ஆங்கிலக் கதை !
ஒரு இந்திக் கதை !
ஒரு சீனக் கதை !

கண்ணைக் கவரும் வண்ண முகப்பு !
களிப்பை நல்கும் நகைச்சுவைத் துணுக்குகள் !

அணா எட்டு

“முல்லை” : : சென்னை-6.

கேள்விப் பெட்டி

பன்மொழிப்புலவர் பதில் தருகிறார்

து. சிவராசன், போளூர்

(அ) ஐயர் என்று எழுதுவது சரியா? 'அய்யர்' என்று எழுதுவது சரியா?

(ஆ) திருவள்ளுவர் திருக்குறளை "மனுநீதிக் கருத்துக்களையே பின்பற்றி எழுதினார்" என்று ஒரு சிலர் வாதிக்கின்றனர்; இது குறித்து உமது கருத்தென்ன?

(இ) தாமிரபரணி ஆற்றுக்கு உள்ள மறு பெயர்-'பொருநல்'-'பொருனை' இரண்டில் எது சரி?

(ஈ) ஒரு சில தமிழ்ப் பத்திரிகைகள் ஒரு சில எழுத்துக்களின் வடிவத்தை மாற்றி எழுதுகின்றன. உதாரணம் 'லை' எனும் எழுத்தை 'லை' என்று எழுதுவது; இப்படி எழுதுவது சரியா? இப்படி எழுத அவர்கள் கூறும் காரணம் என்ன? எந்த முறை தொல்காப்பியத்துக்கு உகந்தது?

(உ) 'குதம்பைச்சித்தர்' பேயர்க் காரணம் தருக.

(அ) ஐயர் என்று எழுதுவதே சரி. அய்யர் என்று எழுதுவது தவறல்ல. ஒலிப்புகிட்டத்தட்ட அதுவே. எதுகையில் ஐயர் என்பது, அய்யர் என்பதுபோலவே மைய்யர், பொய்யர் என்பவற்றினுடனும் கையர் என்பதனுடனும் இசைவது காணலாம். இலக்கணத்தில் ஐயர் என்பதை அய்யர் என்று எழுதுவதை எழுத்துப்போலி என்பர். தொல்காப்பியர் காலத்தில் அ.இயர் என்றுகூட எழுதப்பட்டதாகத் தெரிகிறது.

இந்த ஐயத்துக்குக் காரணம் ஐ, ஔ என்ற உயிர்கள் தமிழுக்கு இயல்பான ஒலிகளல்ல என்றும், சமஸ்கிருதத்திலிருந்து தருவிக்கப் பட்டிருத்தல் வேண்டுமென்றும் சிலர் கருதியதேயாகும். அத்தகையவர் பலர் அவ்வாறு எழுதவும் முற்பட்டனர். ஆனால் ஈற்றில் ஐ வரும் சொற்களை (தலை, மழை, விடுதலை ஆகியவற்றை) அவர்கள்கூட அவ்வாறு (தலய், மழய், விடுதலய்) என்று எழுத முடியவில்லை என்று காணலாம்.

ஐ, ஔ தனி உயிர் அல்லது தனி உயிர் மெய் எழுத்தாகவோ, அத்தகைய ஓரெழுத்துச் சொல்லாகவோ அமையும்போது அது நெடில், இரண்டு மாத்திரை கொண்டது, மற்ற இடங்களில் ஒரு மாத்திரையளவாகக் கிட்டத்தட்டக் குறிலளவாய்க் குறைவது. ஐ என்பதை அய் என்றோ, ஔ என்பதை அவ் என்றோ எழுதுவதால், தமிழின் இப்பண்பு தலைகீழாய்விடும். ஏனெனில் ஒலியியல் பண்புப்படி, 'கை' என்பது 'கய்' என்று எழுதப்பட்டுக் குறிலாகவும், ஐயர் என்பது அய்யர் என்று உயிர் ஈற்றெடுப்பதால் நெடில் போன்றதாகவும் குழப்பமுறும். அதுமட்டுமன்று, விடுதலை என்பதன் ஈற்றெழுத்து ஒலியியல் முறைப்படி குறிலைவிடக் குறுகியது. விடுதலைக்கு என்று எழுதுமிடத்தில் விடுதலய்க்கு என்ற நிலையில் அதுகூட நெடில் தன்மையுடையதாகிவிடும்.

(ஆ) திருக்குறள் கி.பி. 2-ம் நூற்றாண்டுக்கு முற்பட்டது, நெடிது முற்பட்டது என்றே மிகப் பெரும்பாலான ஆராய்ச்சியாளர் முடிவு செய்கின்றனர்; அவர் காலம் கி.மு. 1-ம் நூற்றாண்டு என்ற ஆசிரியர் மறை மலையடிகள் முடிவைப் பெரும்பாலார் ஏற்கின்றனர். இதற்கு முற்பட்டு கி.மு. 3-ம் நூற்றாண்டு, 5-ம் நூற்றாண்டு என்பாரும் உண்டு. அது ஆரியர் வருகைக்கு, அதாவது கி.மு. 1500க்கு முற்பட்டதென்றுவருங்கால ஆராய்ச்சியாளர் காணக்கூடுமென்றே நான் கருதுகிறேன்.

வள்ளுவர் காலமாக ஆராய்ச்சியாளர் கூறும் மிகப் பிந்திய காலத்தை எடுத்துக்கொண்டால் கூட, மனுநீதி கி.பி. 2-ம் நூற்றாண்டுக்கு முற்பட்டதென்றோ, அக்காலத்ததென்றோ ஆராய்ச்சியாளர் முடிவு கட்டமுடியாதபோது, வள்ளுவர் குறளுக்கு அதை ஆதாரமாகக் காட்டுவது எங்ஙனம்? அங்ஙனம் பரிமேலழகர் கருதியதற்கு மன்னிப்பு உண்டு-கால ஆராய்ச்சி இல்லாத காலத்தில் வாழும்பேறும், தமிழ் மரபுப் பற்றும் தளர்ந்து வரும் காலத்தில் எழுதும் சிறப்பும் அவருக்கு இருந்தது. இக்காலத் தமிழாராய்ச்சிப் போர்வை போர்த்த பலர் மனுநீதி, புராணங்கள் ஆகியவற்றுக்கு, ஒரு கால வரையறை உண்டு என்பதையே மறந்து, மதவாதிகள் நிலையில் நின்று, அவை அனாதியாகக் கடவுள் படைப்புக் காலத்திலிருந்தே இயங்குபவை என்று எப்படியோ நம்புகின்றனராதல் வேண்டும். அல்லது அவர்கள் சமஸ்கிருதப் பற்று, சமஸ்கிருத அறிவு, சமஸ்கிருத ஆராய்ச்சி அறிவு அற்றது ஆகவேண்டும். அன்றேல் சமஸ்கிருதப் பற்று அவர்கள் அறிவையும், நேர்மையையும், மனச்சான்றையும் மறைப்பது ஆக வேண்டும்.

இன்றிருக்கும் மனுநீதியோ, புராணங்களோ குப்தர் ஆட்சித்தொடக்கமாகிய கி.பி. 3-ம் நூற்றாண்டுக்கு (கடைச்சங்க முடிவுற்று ஒரு நூற்றாண்டுக்குப் பிற்பட்ட காலத்துக்கு) முற்பட்டதல்ல என்பது வரலாற்றாசிரியர் துணிந்த முடிவு. குப்தர் கால வரலாறுவரை புராணங்களில் கூறப்பட்டுள்ளது. மனுநீதி சிறப்பாக, புத்தர் கால 'அறஆட்சியை' ஒழித்து 'அறமிலா' ஆட்சியை அறமாக்குவதற்காகவே எழுந்தது. புத்தர் பகுத்தறிவாட்சியை ஒழித்து, மூட நம்பிக்கையையே அறிவாகக் தான் இதே காலத்தில்புராணங்கள் எழுந்தன.

கி.பி. 3-ம் நூற்றாண்டுக்கு முன்னும் இன்றைய மனு நீதிக்கு மூலமான வேறு நூல்களோ, புராணங்களுக்கு மூலமான வேறு கதைகளோ நிலவியிருக்கக்கூடும்; நிலவினவாகல் வேண்டும் என்று கருதும் அறிஞர் பலர் உண்டு. ஆனால் இது ஊகம் மட்டுமே. உண்மையில் இது சரியானால், இத்துறை அறிஞர்களில் தலை சிறந்தவரான திருத்தந்தை ஹீராஸ், இவை ஆரியர் வருவதற்கு முன்பே நிலவியவை, ஆரியரால் திரித்துத் தம் புத்த சமண சமய எதிர்ப்புக்கும், திராவிட இன எதிர்ப்புக்கும் (சாதி முறை நீதிக்கும் மூட நம்பிக்கைக் கோட்பாட்டுக்கும்) பயன்படுத்தப் பட்டவை என்று கருதுகிறார்.

ஆகவே திருவள்ளுவர் கருத்துத் தான் அங்கங்கே மனு நீதியின் இருளில் ஒளியாகக் காணப்படுகிறதே தவிர, மனு நீதிக் கருத்துத் திருவள்ளுவருக்கு ஆதாரமன்று.

இதே முடிவை இன்னொரு வகையாகவும் தெளிவுபட உணரலாம். திருவள்ளுவர் கருத்துக்கள் அனைத்தும் ஓரினக் கருத்துக்கள், ஒன்றுக்கொன்று தழுவி ஒரு முழுக் கோட்பாடாக, முற்போக்குக் கோட்பாடாக, உலகமொப்பும் சமய இனச் சார்பற்ற மெய்க்கருத்தாக ஏற்றுக் கொள்ளத்தக்கவை, ஒருகருத்துக்கு முரண்பட்ட 'அயல்' கருத்துக்கள் அதில் கிடையாது. மற்றச் சங்க கால ஏடுகளில், வள்ளுவர் ஒளிக்கருத்துக்கள் பலவற்றிடையே, சில இருள் நிழற்கோடுகளைக் காணலாம். பிற்காலத் தமிழ் சமஸ்கிருத நூல்களில் மிகுதியாக இருள் நிழலையும், ஒரு சில வள்ளுவர் ஒளிக் கோடுகளையும் காண்கிறோம். ஆனால் மனு முதலிய சுமிருதிகள், புராணங்கள், இராமாயண பாரத இதிகாசங்கள் ஆகியவற்றிலோ செறிந்த இருளினிடையே ஒரு சில வள்ளுவ ஒளிக் கதிர்க் கோடுகளை மின்னல்கள் போலத் தான் காண்கிறோம். அந்தக் கருத்துக்கள் அவற்றின் பொது இருட் கருத்துக்களுக்கு முரண்பட்டனவாதலால், வள்ளுவரிடமிருந்து கடன்வாங்கி, இரவல் என்று கூறுமல் கவர்ச்சிகரமான மேற்பூச்சாக, நல்லோரையும் அச்சப்படுத்தும் தூண்டில் இரையாகச் செருகப்பட்டனவே தவிர வேறல்ல.

கம்பர் கவிதையில் வள்ளுவர் கருத்துக்கள் முரண்பட்ட கருத்துக்களிடை மின்னுவது போலவே அதைவிட மிகுதியான முரண்பாடுகளிடையே, மனுநீதி முதலியவற்றில் வள்ளுவர் கருத்துக்கள் மின்னுகின்றன.

'மனுநீதி' என்று இன்று கூறப்படும் நூலின் உண்மைப் பெயர் மானவ தர்ம சாஸ்திரம் என்பது. அது ஏறத்தாழ 5000 சுலோகங்களுடையது. ஆதிமனு இயற்றிய மனுநீதி 100,000 சுலோகங்களை உடையதென்றும், அதனைப் பிற்காலத்தில் 25,000 ஆக யாரோ குறுக்கினரென்றும், அதைத்தான் 5000 ஆகக் குறுக்கியுள்ளதாகவும் ஆசிரியரே குறிக்கிறார். அந்த மனுநீதி நூலாக்கிய ஆதி மனுவே, ஒருவேளை திருவள்ளுவராக, திருவள்ளுவருக்குப் பிற்பட்ட அவர் சீடராக, வழி நூலாசிரியராகக்கூட இருத்தல் கூடும் என்று இந்தப் புராண அடிப்படையாகக் கூறலாம்.

எப்படியும் சமஸ்கிருத மனுநீதியோ, புராணமோ, இதிகாசங்களோ, திருக்குறளுக்கு மூலங்களாகும் தகுதியுடையவையும் அல்ல; காலத்தால் அத்திருக்குறளுக்கு முற்பட்டவை என்று நிலை நாட்டக் கூடியவையுமல்ல.

(இ) பொருநை, பொருநல், பொருந்தம்-இவை ஆற்றுப் பெயரின் எழுத்துத் திரிபுகள். மூன்றுக்கும் மேற்கோள் காட்டலாம். ஆனால் பொருனை என்று 'னன்னகரமிட்டு' எழுதி, அதற்கு யாராவது மேற்கோள் காட்டினால், அதை நிலைநாட்ட அம்மேற்கோள் பயன்படாது. நகரம் தந்நகரமல்ல, னன்னகரமே என்பதற்கு அவர்கள் பொருள் வகையிலோ, வேறு இலக்கண வகையிலோ ஆதாரம் தேடியாக வேண்டும். மூன்றாவது வடிவம் அது தந்நகரம்தான் என்பதைச் சுட்டுகிறது.

'பொருந்து' என்று தற்காலம் வழங்கும் சொல்லின் மூலவடிவப் பகுதி, 'பொருந்' என்று பழய இலக்கணங்கள் கூறுகின்றன. அதனடிப்படையான தொழிற் பெயராகக் கொள்ளின், தந்நகரம் அமைந்த மூன்று வடிவங்களும் பொருந்தும். பகுதி 'பொரு' என்று கொண்டால் கூட, பெயரிடை நிலையாகத் தந்நகரமே வர முடியும்.

'பொருனை' மேற்கோள்கள் எழுத்துப் பிழையாகவே இருத்தல்வேண்டும் என்பதை இவை சுட்டிக் காட்டும்.

(ஈ) இதே கேள்வி (அ) பிரிவின் விடை காண்க.

(உ) குதம்பை என்பது ஒரு காதணி, தோடு, காதின் துளையடைக்கும் சடை அல்லது கெட்டி. குதம்பைச் சித்தர் இவற்றை அணிந்தவராக அப்பெயர் பெற்றிருக்கலாம். அல்லது அதனை அணிந்த பெண்ணைக் 'குதம்பாய்!' என விழித்துப் பாடுவதால் அப்பெயர் பெற்றிருக்கலாம்.

பெயரைக் குதம்பேய் என்றாக்குவாரும் உண்டு. இது அகப்பேய்ச் சித்தரை நினைவூட்டுவது. ஆனால் குதம் என்ற முன்னிலை சொல் பொருந்துமாறு காட்டல் இயலாது, 'குதம்' என்பது கோபமாயின், வடிவம் 'குதம்பேய்' ஆதல் வேண்டும்.

விரைவில் ஆரம்பமாகிறது!

தென்றலில்

ம. கி. தசரதன், எம். ஏ.

எழுதும்

தொடர் கதை

நான் எழுத்தாளன் ஆனேன்

கண்ணதாசன்

- 6 -

இராமச்சந்திரபுரம் ஓர் அழகிய சிறு நகரம். ஆம்! உயர்தரக் கிராமங்களின் பட்டியலில் அது சேர்க்கப்பட்டாலும், நகரத்துக்குரிய சிறப்பியல்புகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. இந்தியத் துணைக்கண்டத்தில் எந்த நகரத்திலும் காண முடியாத அளவுக்கு அகன்ற பெரிய நடுச்சாலை அதன் தனிச் சிறப்பு. ஏறக்குறைய அந்தச் சாலையின் அகலம் 200 அடி இருக்கும். சாலையின் இருமருங்கிலும் சிறிய சிறிய கடைகள் உள்ளன. ஊருக்குள் சென்றுவிட்டால், எல்லாச் சாலைகளுமே ஒழுங்காக அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். செட்டிநாட்டின் மற்றைய நகரங்களைப் போலவே, இங்கும் வானளாவி நிற்கும் மாடமாளிகை ஏராளமாக உண்டு. நகரத்தின் நான்கு எல்லைகளிலும் முறையாகக் கட்டப்பெற்ற நான்கு ஊருணிகள் உண்டு. அடர்த்தியாக வளர்ந்த அரசமரங்களும், புளிய மரங்களும் நகரத்தின் எழிலுக்கு மகுடம் வைப்பன. ஒரு சிறிய பள்ளியும் அங்கே உண்டு.

பஸ்ஸைவிட்டு இராமச்சந்திரபுரத்தின் நடுச்சாலையில் கீழே இறங்கிய அவன், அங்கே நின்றவாறே சுற்றும் முற்றும் பார்த்தான். சில இடங்கள் மனிதனுக்குப் பார்த்தவுடனேயே பிடித்துவிடும். சில இடங்கள் பழகிய பின்னும் வெறுப்புத் தரும். மனதுக்கு இது ஒரு வியாதி. கண்களைப் பகைத்துக்கொண்டு அது, தானே, தனியாகச் செயல்படுகிறது. அந்த இளைஞனுக்கு, இராமச்சந்திரபுரத்தைப் பார்த்தவுடனேயே பிடித்துவிட்டது. அதனால்தான் அவன் அதை நகரம், நகரம் என்றே வர்ணிக்கிறான்.

மெதுவாக, அவன் பத்திரிகை அலுவலகத்தை விசாரித்துக் கொண்டு அங்கே சென்றான். ஒரு சிறிய கட்டிடம். பார்த்தால் பிள்ளையார் கோவில் மாதிரி இருக்கும். முன் பக்கத்துச் சுவரில், முட்டை கலந்த வெண் சாந்து பூசப்பட்டிருந்தது. செட்டிநாட்டு முறைப்படி, முன் வாசலும் படிக்கற்களும் தலைக்குடையும் அமைக்கப்பட்டிருந்தன. அதன் மேற்பகுதியில் வழக்கம் போல் ஒரு சிலை இருந்தது. அந்தத் தெருவிலேயே அது தான் கடைசிக் கட்டிடம். அவன் மெதுவாக உள்ளே நுழைந்தான். பத்திரிகைக்கு அலுவலகமாக அமைந்திருந்த அந்த வீடு அமைதி தவழும் இடமாகக் காட்சியளித்தது. காலில் பழைய பூட்சும், கையில் தகரப் பெட்டியுமாக நின்ற அவன், "சார், சார்" என்று குரல் கொடுத்தான். பதில் இல்லை! இன்னும் உள்ளே நுழைந்தான் அந்த எழுத்தாளன். இரண்டுதிண்ணைகள்-நடுவே ஒரு ஊஞ்சல். வலப்புறத்துத் திண்ணையில் மேல் உடம்பில் சட்டை போடாமல், வெறும் துண்டை மட்டும் போர்த்திக்கொண்டு, ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவர்கையில் ஒரு கணக்குப் புத்தகம் இருந்தது. கீழே ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவருக்கு முன்னால் ஒரு கைப்பெட்டியின் மீது மற்றொரு கணக்குப் புத்தகம் விரித்து வைக்கப்பட்டிருந்தது. இருவரும் ஏதோ ஒரு கணக்கைப் பெயர்த்தெழுதிக்கொண்டிருந்தார்கள் என்பது, அவர்கள் இருந்த நிலையிலிருந்து தெரிந்தது. தலை குனிந்து, கணக்கிலே ஆழ்ந்திருந்த அவர்கள், அந்த எழுத்தாளனை நிமிர்ந்து பார்த்தார்கள்.

"யார் நீங்கள்?"

"திருச்சியிலிருந்து வருகிறேன்"

"யாரைப் பார்க்க வேண்டும்?"

"பத்திரிகையின் அதிபரைப் பார்க்க வேண்டும்"

"என்ன விஷயம்?"

"அவரது சகலை ஒரு கடிதம் கொடுத்து அனுப்பியுள்ளார்!"

"நான்தான்" என்று கூறிய அவர், கடிதத்தைக் கையில் வாங்கி, பிரித்துப் பார்த்தார். அவரது முகம் மலர்ந்தது. அப்பாடா! சிபாரிசுக் கடிதம் படித்துவிட்டு ஒருவரின் முகம் மலர்ந்ததை, அப்போதுதான் அவன் கண்டான்! அவனது அகமும் மலர்ந்தது. "உட்காருங்கள்" என்று கூறிய அவர், தொடர்ந்து, "என்ன சாப்பிடுகிறீர்கள்?" என்றும் கேட்டுவிட்டு, காப்பிக்கு உத்திரவிட்டார். இதுவும் அவனுக்குப் புதுமையாகத்தான் இருந்தது. தாய் தந்தையரைத்தவிர, அவனை அன்போடு உபசரித்தவர்கள் அதிகமாகக் கிடையாதல்லவா? அவன் ஊஞ்சலில் உட்கார்ந்தான். அவன் காலிலிருந்த பழைய பூட்சு, தானும் தலை நிமிர்ந்து நின்றது. அதாவது, அதிலிருந்து ஒரு ஆணி கழன்று மேல் பாகம் தலையைத் தூக்கிக் கொண்டு நின்றது.

"என்ன பெயரில் இதுவரை கதை கட்டுரைகள் எழுதியிருக்கிறீர்கள்?" என்று அவர் கேட்டார்.

சொந்தப் பெயரைச் சொல்ல வந்த அவன், கொஞ்சம் தயங்கினான். புனை பெயருக்குச் செல்வாக்கு அதிகம் இருந்த காலம் அது! அதிலும் தாசன் என்று வரும் புனை பெயருக்கு மரியாதையே தனி. பாரதிதாசன், கம்பதாசன், சக்திதாசன், காளிதாசன் என்ற பெயர்கள் நாலு பேருக்குத் தெரிந்த பெயர்களாக விளங்கின. அவன், 'என்ன தாசன் என்று சொல்லலாம்' என்றுதான் யோசித்தான். சில வினாடி யோசனைக்குப்பின், தான் யோசித்துச் சொல்வதை அவர் அறியாமல் மறைக்க, எங்கேயோ நினைவில் இருந்தவன்போல், "என்ன கேட்டீர்கள்?" என்று கேட்டான். மீண்டும் அவர் பழைய கேள்வியையே திருப்பினார். அப்போதே அவன் முடிவு கட்டியபடி பளிச் சென்று, "கண்ணதாசன்" என்பது என்புனைபெயர் என்றான். அவரும் ஏதோ அது அறிமுகமான பெயர்போல், "பார்த்திருக்கிறேன் பத்திரிகைகளில்" என்றார். இதற்குப் பெயர்தான் சந்தர்ப்பம் என்பது! உண்மையில் அவர் அந்தப் பெயரை, எந்தப் பத்திரிகையிலும் பார்த்திருக்க முடியாது. அந்தப் பெயரே இரண்டு நிமிடங்களுக்கு முன்னால்தான் பிறந்தது! தெரியாததுபோல் காட்டிக்கொள்வது பெரிய மனிதர்களுக்கு அழகில்லையல்லவா? அவர் தெரிந்ததுபோல் காட்டிக்கொண்டார். அவனும் சளைத்தானா? "நீங்கள் பார்த்திருக்கக்கூடும்" என்று மட்டும் கூறினான்.

கீழே உட்கார்ந்து கணக்கு எழுதிக்கொண்டிருந்தாரே ஒருவர், அவர் திறந்த வாய் மூடாது அவனையே பார்த்துக் கொண்டிருந்தார். நிறத்தில் அவர் கறுப்புத்தான். ஆனால் அமைப்பான உருவம். ஜிப்பாப் போட்டிருந்தார். தலையை அழகாக வாரிவிட்டிருந்தார். கணக்குப் புத்தகத்தில் அவர் எழுதிய எழுத்துக்கள் மணி மணியாக இருந்ததை அவன் கவனித்தான்.

"உங்கள் பெயரென்ன?" என்று அவரைப் பார்த்து அவன் கேட்டான். அவனைப் போலவே வயதில் இளையவரான அவர் தன் பெயர் 'சோமநாதன்' என்றார். பிறகு அவன் அவரைப் பற்றி முழுவதும் விசாரித்துத் தெரிந்து கொண்டான். அன்றிலிருந்து, அவனது நெருங்கிய நண்பனாக ஆகிவிட்ட அவரது சொந்த ஊர், வலையபட்டி என வழங்கப்படும் வலம்புரியாரும். அவர்தான் இந்நாளில் 'வலம்புரி சோமனாதன்' என்று அழைக்கப்படும் எழுத்தாளர் ஆவார். நட்புக்கு அவர் ஒரு இலக்கணம். சொல்லுகிற கருத்தைக் கூர்ந்து கவனிப்பதிலும், எதையும் ஆழ்ந்து படித்துச் சுவைப்பதிலும், தான் சுவைத்ததை தெளிவாக, அழகாக, பிறருக்கு மயக்கம் தரும் வகையில் எடுத்துரைப்பதிலும் அவர் வல்லவர். அந்த எழுத்தாளனுக்கு அங்கே கிடைத்த வேலையைக் காட்டிலும், அந்த நண்பர்தான் உயர்வாகத் தோன்றினார். நிற்க,

கடிதத்தைப் பத்திரிகை அதிபர் படித்தவுடனேயே, அவனுக்கு வேலை கிடைத்து விட்டது. மிகுந்த மரியாதையோடு அவன் நடத்தப்பட்டான். முதலில் அவனுக்குக் கொடுக்கப்பட்ட வேலை, 'புரூப்' திருத்துவது. பழக்கமில்லாத அந்த வேலையையும் இரண்டு நாட்களில் அவன் பழகிக் கொண்டான். 'புரூப்' திருத்தும்போதே, எந்தக் கட்டுரையானாலும் சாரமற்ற பகுதியை அவன் அடித்துவிடுவான். அது ஆசிரியரின் வேலைதான் என்றாலும், அவனுக்கிருந்த தன்னம்பிக்கை அதைச் செய்யத் தூண்டியது. பத்திரிகையின் அதிபர் அதைக் கவனித்தார். அவன் எதை யெதை அடித்துத் திருத்தினானோ, அதையெல்லாம் அவர் ரசித்தார். உண்மையிலேயே அவை தேவையற்ற பாகங்கள்தான் என்பதைக் கண்டார்.

பிறகு ஒரு நாள், பத்திரிகைக்கு ஒரு தலையங்கமே எழுதிக் கொடுக்கும்படி அவனைக் கேட்டார். யுத்தத்திற்குப் பின் இந்திய தேசீய இராணுவம் மலேயாவிலிருந்து இந்திய உபகண்டத்துக்குள் பிரவேசித்த நேரம் அது. 'வருக, வருக' என்று தலைப்பிட்டு, அவன் அந்த இராணுவத்தை வரவேற்றிருந்தான். அதற்குக் கீழே துணைத் தலையங்கமாக 'பாரதத் தாய் சிரிக்கிறாள்' என்று தலைப்பிட்டு, கேப்டன் லக்ஷ்மியின் தலைமையில் வந்த ஜான்ஸி ராணிப் படையைப் பாராட்டியிருந்தான். இரண்டு தலையங்கங்களையும் படித்துவிட்டு, பத்திரிகை அதிபர் ஆனந்தக் கூத்தாடினார். அதன் பலன், அடுத்த வாரமே ஆசிரியராக இருந்தவருக்கு வேலை போயிற்று. அந்த எழுத்தாளன் ஆசிரியராக உயர்த்தப் பட்டான். தான் ஆசிரியரா[க] உயர்த்தப்பட்டதில் அவனுக்கு மகிழ்வில்லை. தன்னிடத்தில் அதிக அன்பு செலுத்திய ஆசிரியர் விலக்கப்பட்டதில், அவன் மிகுந்த மன வேதனை அடை[ந்]தான். அவரிடம் சென்று, அவ[ர்] விலக்கப்பட்டதற்குத் தான் காரணம் இல்லை என்பதைப் பல் முறை அவன் கூறினான். வழக்கத்திற்கு விரோதமாக, அவ[ர்] அவனிடம் அதிகமான அன்பு செலுத்தி, அவன் மீது தனக்கு சந்தேகமோ, கோபமோ கிடை யாது என்று கூறினார். அன்[று] முதல், தினசரிமாலைவேளைகளில் அவரைச் சந்திக்க அவன் தவ[ற] வதில்லை. ஆனால் பத்திரிகை அதிபர் இதை விரும்பவில்லை. மாலை நேரங்களில் அவன் அந்[த] ஆசிரியரைச் சந்திக்காதவா[று] தடை செய்து வந்தார்.

எழுத்தாளன் ஆசிரியன் ஆன[]தும், தன்னுடைய ஆசைகளை யும் ஆர்வத்தையும் கொட்[டி] ஏராளமாக எழுதலானான். எழுத்துத் துறையிலே அ[]

— 3ம் பக்கம் —

— 2-ம் பக்கம் தொடர்ச்சி —

பித்தேன். எனது நிலையறிந்த எங்கள் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், முயன்று எனக்குக் கல்லூரியில் விரிவுரையாற்றும் வேலையை வாங்கிக்கொடுத்தார். ஏறத்தாழ ஒத்த வயதுடைய கல்லூரி மாணவர்களுடனும், அறிவுக் கருவூலங்களான பேராசிரியர்களுடனும் பழகுவதில் சிறிது சிறிதாக எனது துயரம் மறைந்துகொண்டேவந்தது.

பேராசிரியரிடம் மனம்விட்டுப் பழகினேன். அவர் எனக்கு ஆசானாக மட்டுமல்லாமல் தந்தையாக-அண்ணனாக - நண்பராக - இருந்தார். மனம்விட்டு அவரிடம் எதையும் பேசினேன். வேணிக்கு மணமான அன்று நான் அடைந்த வேதனை கொஞ்சமல்ல! அவளுக்காக நான் பெறவியலாத பெற்றோரை இழந்தேன்! வாழையடி வாழையாக விளங்கிவந்த குடும்பத்தின் மதிப்பையும், எனது சொத்தையும் துறந்தேன்! பெற்றோரின் மரணத் துயரையும் பொறுத்துக்கொண்டேன், மனதிற்கினியவளை மணந்துகொண்டு வாழப்போகிறோம் என்ற நிம்மதியில். ஆனால் வேணி இன்னொருவனின் மனைவியானாள்! என் மனக்கோட்டை சரிந்துவிட்டது!

என் 'காதல் கதை'யை ஆசிரியரிடம் கூறினேன். உண்மைக் காதல் பற்றிய தத்துவங்களை வெளியிட்டுவிட்டு சாந்தியை மணந்துகொள்ளும்படி அறிவுரை கூறினார் அவர்.

சாந்தி என்னை மணக்க இசைவாளா? அவள் பெயருக்கு எழுதப்பட்டிருக்கும் எனது தந்தையின் சொத்துக்காகவே இப்போது அவளை நான் நாடுவதாக அவள் நினைத்தால்? எனது சொத்துரிமையை சாந்தி பெற்றதற்காக நான் கவலைப்படவில்லை. எனது செயலுக்காக மனமுடைந்த தந்தை, கோயிலுக்கும் சோம்பேறி மடத்துக்கும் எழுதிவைக்காமல், சாந்தியின் பெயருக்காவது எழுதிவைத்தாரே என்று நிம்மதி யடைந்தேன்.

அழிந்த என் குடும்பத்தைப் பற்றியே எந்நேரமும் எண்ணி நைந்துகொண்டிருந்த எனக்கு, காலத்தின் சிகிச்சை பலனளித்தது. எந்நேரமும் வீசிக்கொண்டிருந்த மனப்புயல் குறைந்து, எப்போதாவது பழைய நினைவுகள் வரும். மனதில் புயல் வீசும்; பிறகு ஓய்ந்துவிடும். மனிதனின் வாழ்விற்கு உற்ற துணையாக இருப்பது மறதிதான்! முள்ளைப்போலக் குத்தி நெஞ்சைத் துன்புறுத்தும் நிகழ்ச்சிகள் வாழ்க்கையில் ஏற்படுகின்றன. நாளடைவில் அவற்றை மறந்துவிடுகிறோம். எப்போதாவது பழைய சம்பவங்கள் நினைவுக்கு வருகின்றன. அவை துயரம் தோய்ந்தவையாகவும் இன்பம் தேங்கியவையாகவும் இருக்கின்றன. நினைப்பிற்கேற்ப, மனதில் துயரமும் மகிழ்ச்சியும் ஏற்படுகின்றன. எப்போதாவது நினைப்பதை விட்டு - மறதியே இல்லாமல் - எப்போதுமே கடந்த சம்பவங்களை நினைத்துக்கொண்டிருக்கும் நிலை இருக்குமானால், மனிதனுக்கு வாழ்விலே அமைதி ஏது? தென்றலேது? இன்பமேது?

பேராசிரியரின் அறிவுரையை ஏற்று, சாந்தியைக் காண நான் அத்தையின் ஊருக்குப் பயணமானேன்.

சாந்தி என்னை ஏற்பாளா? சிறிய வயதில் பழகிய பாசம் அவளுடைய சம்மதத்தைத் தருவதாயினும், அவள், 'பெற்றோரின் சாவுக்கும் வராத புன்மதியானவன் நீ! எங்கள் முகத்தில் விழிக்க உனக்கு வெட்கமாக இல்லையா' என்று இழிந்துரைப்பாளா?-என்றெல்லாம் எண்ணினேன். வந்த வழியே ஊருக்குத் திரும்பிவிடலாமா என்று யோசித்தேன். மனம் சிந்தனை செய்தது. கால்கள் நடந்துகொண்டே இருந்தன!

அந்தி வானத்தின் அழகிய தோற்றமும் வயற்பரப்பின் பசுமை அழகும் என் கண்களுக்குக் குளிர்ச்சியையும் மனதிற்கு அமைதியையும் தந்தன. ஆற்றங்கரையில் அழகிகளைக் கண்டபோது, சாந்தியைக் காணவேண்டுமென்று மனம் ஆவலால் துள்ளியது! சோலையிலே குலவி மகிழ்ந்துகொண்டிருந்த காதலர்களைக் கண்ணுற்றபோது, வேணியின் நினைவு வந்தது. என் வாழ்வில் தோன்றி மறைந்த சோக நிகழ்ச்சிகள் நினைவுக்கு வந்தன.

சிந்தனையிலிருந்து நான் மீண்டபோது, ஊரைத் தாண்டி வெகுதூரம் வந்துவிட்டிருப்பதை உணர்ந்தேன். எனது செய்கைக்கு வெட்கித் தலைகுனிந்து, வந்த வழியே திரும்பினேன்.

அத்தையும் மாமாவும் என்னை அன்புடன் வரவேற்பார்கள், என்று நான் எதிர்பார்க்கவில்லை! 'வந்தாயா செல்வம்! என் வயிற்றில் பாலை வார்த்தாயே' என்று என்னைக் கட்டிக்கொண்டு அழுதார்கள் அத்தை. மாமா இன்முகத்துடன் பேசினார். சிறிது நேரத்தில், நடமாடும் அழகுச் சிலையொன்று இடையில் நீர்க் குடமேந்தி வந்தது.

'வாம்மா சாந்தி! இதோ பாரம்மா உன் அத்தான்!' என்று ஆவல் பொங்கும் குரலில் அத்தை கூறினார்கள். அழகிய நயனங்கள் என்னை நோக்கின! சாந்தியா அவள்? இவ்வளவு அழகியா சாந்தி! என்னால் நம்பவே முடியவில்லை. 'நலமா சாந்தி?' என்றேன். 'உம்' என்றாள். கனி குலுங்கும் மாமரம் கண்ணெதிரில் இருக்கும்போது காட்டில்

காணும் நச்சு மரத்தின் பழத்தை நாடித் திரிந்தோமே என்று மனம் வருந்தினேன். அத்தையும் மாமாவும் அருகில் இருப்பதையும் மறந்து கண்ணிமைக்காமல் நான், சாந்தியை வெறித்தவனைப்போலப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

நான் வந்த விவரத்தைப்பற்றி அத்தையிடம் பேச எனக்கு நா எழவில்லை. சாந்தியையே கேட்டுவிட எனக்குத் துணிவும் ஏற்படவில்லை.. மாமாவிடம் இதைப்பற்றிப் பேச்செடுக்க நெஞ்சில் உரமில்லை.

இரண்டு நாட்கள் சென்றன. நான் எடுத்து வந்த விடுமுறையும் அடுத்த நாளோடு முடிவடையும்! இனியும் பேசாமலிருந்தால் பயனில்லை என்று அத்தையைக் கேட்டேன். 'கனிக்கு உரியவன் நீ பறிக்காதே என்று தடை சொல்ல எனக்கு என்னப்பா உரிமை?' என்று சிரித்தார்கள். உண்மையாகவா அத்தை? மாமா இதற்கு சம்மதிப்பாரா?' என்று வாய் பிளந்து கேட்டேன். இனிக்கும் பதிலையே அத்தை சொன்னார்கள். 'சாந்தியின் சம்மதம் வேண்டாமா?' என்றேன். 'அவள் பெற்றோர்க்கு அடங்கிய பெண்ணப்பா!' என்றார்கள். என் மனதில் சுருக்கென்று தைத்தது. அந்தப் பதில் என்னை அவர்கள் குத்திக் காட்டுவதைப்போன்றிருந்தது. அத்தையின் மனம் பளிங்கு போன்றது என்பதை அறிந்தவன் நான். ஆகவே அவர்கள் கூறியதை நான் தவறாகக் கொள்ளவில்லை. அடுக்களையில் இருந்த சாந்தியை அழைத்தேன். என்னை மணந்துகொள்ள உனக்கு விருப்பமா சாந்தி? என்று அத்தையின் எதிரிலேயே கேட்டேன் அவள் ஒன்றும் சொல்லாமல் தலை குனிந்த வண்ணம் திரும்பிச் சென்றாள். மௌனம் ஒப்புதலுக்கு அறிகுறியா? அத்தையின் முகத்தைப் பார்த்தேன். அவர்கள் முறுவலித்தார்கள்.

மனதைக் கொள்ளை கொள்ளும் மாலைப்பொழுது வந்தது. நீர்எடுத்துவர சாந்தி ஆற்றிற்குப் புறப்பட்டாள். சிறிய வயதில் அவளுடன் பழகிய நாட்கள் என் நினைவிற்கு வந்தன. ஆற்றை நோக்கிச் சென்றேன். அங்கே சாந்தியைக் காணவில்லை. அன்று வந்த அதே பெண்கள் நீர் எடுத்துக்கொண்டு திரும்பினர். சாந்தியைக் காண வந்திருப்பார்போலிருக்கிறது?" என்றுஒருத்தி 'களுக்' கென்று சிரித்தாள். மற்றவர்களும் சிரித்தனர். "பெண்களே இப்படித்தான்! தனித்திருக்கும் ஆடவரைக் கேலிசெய்துசிரிப்பதிலே அவர்களுக்கு அலாதி மகிழ்ச்சி! சாந்தி வரட்டும், அவர்களை அடக்கச் சொல்கிறேன்!" என்று மனதிற்குத் தேறுதல் கூறிவிட்டு, மணற்பரப்பில் படுத்தேன். மங்கையர் போவதை, விழிகளை நீட்டிப் பார்த்துக் கொண்டே இருந்தேன். 'எனக்கு முன்பு புறப்பட்டசாந்தி, இவ்வளவு நேரங் கழித்து வருகிறாளே! எங்கே இருந்து வருகிறாள்?' என்று சிந்தித்தேன். அருகில் வந்தாள் சாந்தி. "எப்போது வந்தீர்கள் அத்தான்?" என்றாள். "ஏன் வந்தாய்?' என்று கேட்காமற் போனாயே!" என்றேன், சிரித்தபடி. "நீங்கள் படித்தவர்; பட்டம் பெற்றவர். உங்களுடன் பேச என்னால் முடியுமா?" என்றாள். 'உன் கண்களை வெல்ல என்னால் முடியுமா?' என்றேன். சாந்தி தரையை நோக்கியபடியே நடந்து சென்று குடத்தில் நீர் முகந்தாள். 'சாந்தி!' என்றேன். என் குரல் கம்மி ஒலித்தது. குனிந்தபடியே முகத்தை என் பக்கம் திருப்பினாள். பெதும்பைப் பருவத்தில் அவள் என்னுடன் பழகிய நாட்களை நினைவு படுத்தினேன். மணல் வீடு கட்டி மரத்தடியில் சின்ன அடுப்பில் சிறிய செப்பில் சோறாக்கி, மரப்பாய்ச்சிகளுக்கு உணவு படைத்து, அவற்றிற்குத் திருமணம் செய்து வைத்து விளையாடிய சம்பவங்களை நினைவு படுத்தினேன்; நீர்க் குடத்தை இடுப்பிலேந்தி அவள் மௌனமாக நடந்தாள். ஓரிடத்தில் நின்றாள். 'மாங்கொட்டை ஒன்றை நிலத்தில் ஊன்றி நீரூற்றி வந்தோமே, நினைவிருக்கிறதா அத்தான்?' என்றாள். 'ஆமாம்! அது முளைத்து தளிர் விட்டு செடியாக வளர்ந்ததே!' என்றேன். 'தருவாகக் கூட வளர்ந்தது. அத்தான்! ஆனால், பலன் தரு முன்னமே அது பட்டுப் போயிற்று!' என்று அந்த உலர்ந்த மரத்தைக் காட்டினாள். நான் ஒன்றும் பேசாமல் அவளைப் பின் தொடர்ந்து நடந்தேன்.

சாந்தி ஆரம்பப் பள்ளிப் படிப்போடு நின்று விட்டவள்தான். ஆனால் வார்த்தைக்கு வார்த்தை விட்டுக் கொடுக்காமல் வேணியுடன் கல்லூரியில் வாதமிடும் என் சொல் வன்மை, சாந்தியிடம் தோற்றது! பட்டமரம் அவள் கவனத்தை ஏன் கவர்ந்தது? அவள் மனதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை!

நாளை காலை ஊருக்குச் செல்ல வேண்டும் என்று அத்தையிடம் கூறினேன். 'இதற்குள்ளாகவா அத்தான்?' என்றாள் சாந்தி. 'போய் விடுமுறை வாங்கிக் கொண்டு வருகிறேன். நமது திருமணத்திற்கு!' என்றேன். அவள் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள் அத்தையைப் பார்த்தேன். 'வெட்கத்தைப் பார், வெட்கத்தை! அன்னியனா உன்னுடன் பேசுகிறான்? எப்படித்தான் நீ அவனுடன் குடும்பத்தை நடத்தப் போகிறாயோ!' என்று சாந்தியைக் கேலி செய்தார்கள் அத்தை!

நள்ளிரவு நேரமிருக்கும். அப்போதும் தூக்கம் வராமல் நான் புரண்டு புரண்டு படுத்தேன். சாந்தியும் தூங்கவில்லை என்று தெரிந்தது. 'அம்மா!' என்றாள் சாந்தி. நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தார்கள்! சாந்தி மெதுவாக எழுந்து சென்றாள். பூனைபோல் ஓசைப்படாமல் நான் அவளைப் பின் தொடர்ந்தேன். அவள் வளைக்கரம் பற்ற என் கைகள் துடித்தன! எனக்கு மனைவியாகப் போகிறவள் தானே சாந்தி! என்னைத் தடை செய்ய யார் இருக்கிறார்கள்?-என்ற எண்ணம் எனக்குத் துணிவை ஊட்டியது. புறக்கடைப் பக்கம் சென்றாள் சாந்தி. அங்கே புல்தரையில் அமர்ந்தாள் அவளருகில் நான் உட்கார்ந்தேன். 'அத்தான்!' என்றாள். தழுதழுத்த குரலில். 'என்னை மன்னித்துவிடுங்கள்' என்றாள். 'எதற்காக உன்னை நான் மன்னிக்க வேண்டும்? நீயல்லவா என்னை மன்னிக்க வேண்டும்!' என்று அவள் மலர்க்கரம் பற்றினேன். 'வேண்டாம் அத்தான்? என்னை மணக்கும் எண்ணத்தை விட்டு விடுங்கள்!' என்று கரத்தை விடுவித்துக் கொண்டாள். 'என்ன சொல்கிறாய் சாந்தி!' என்றேன் திகைத்தவாறே. 'எனது உள்ளம் வேறொருவருக்குச் சொந்தமாகிவிட்டது!' என்றாள். ஏமாற்றத்தால் என் உள்ளம் சோர்ந்தது; உடல் நடுங்கியது. 'என் பெயருக்கு மாமா எழுதியிருக்கும் சொத்து எனக்கு வேண்டாம் அத்தான்! அது தங்களுக்கே உரியது!' என்றாள் சாந்தி!

உட்கார்ந்திருந்த இடத்தைவிட்டு எழுந்தேன்! கதவைத் திறந்துகொண்டு வீட்டைவிட்டு வெளியேறினேன். 'இந்த நள்ளிரவில் எங்கே அத்தான்?' என்ற சாந்தியின் குரல், கிணற்றிலிருந்து ஒலிப்பதைப் போன்று இருந்தது!

மாந்தோப்பு எதிர்ப்பட்டது! என் இதயத்தைப் போலவே அதில் பயங்கர இருள் சூழ்ந்திருந்தது! மாலையில் அந்தத் தோப்பில் குலவி மகிழ்பவர்கள், சாந்தியும் அவள் காதலனுமா? அதற்காகத்தான் அந்தப் பெண்கள் என்னைப் பார்த்துச் சிரித்தார்களா?

பசுமை இழந்து உலர்ந்துபோன மாமரம், சாலையோரத்திலே கறுலமையாகத் தெரிந்தது! சாந்தியும் நானும் சிறிய வயதிலே நீரூற்றி வளர்த்த மரம்தான்-பருவத்திலே பலன் தராமல் பட்டுப் போய்விட்டது!

'பட்டமரம்!' என்று முணுமுணுத்தேன். கால் போன திசையிலே நடந்துகொண்டிருந்தேன்! ★

4. கலைவாணர் இல்லாக் கலை.

சூடும் மலரில்லை; சுட்டும் திலகமில்லை;
வாடும் எழிலுக்கு வாழ்வெங்கோ!-நாடும்
விலையிழந்த சிப்பி; விதவையென வெம்பும்
கலைவாணர் இல்லாக் கலை.

பே. இராசகோபாலன், தாம்பரம்.

❁

ஊரில்லா ஊரும் கலையில்லா வானமுநற்
பேரில்லா வாழ்வும் பயனின்றும்-பாரில்
புலவோர்தாம் போற்றிப் புகழ்ந்திடினும் என்னும்
கலைவாணர் இல்லாக் கலை.

—இரா. முடியரசு, வெள்ளஞ்சம்பட்டி.

❁

வெண்முகிலே வல்லே விரைவதென் கொல்லோகாண்
தண்ணொளியே நகருயர் தங்கநிலா-நண்ணி
தலைமறைக்கக் கூறியதோ! தான்கண்டதுவோ
கலைவாணர் இல்லாக் கலை.

—மு. கோவிந்தராசன், கூந்தங்குடி.

❁

பெய்யு மழை பொய்ப்பின் பயிர்கள் வாடுமிக
நைய மதுபோலுமா நாதியற்றே-உய்யும்
நிலை காண நொந்துலைந்து நற்கின்ற கதையோ
கலைவாணர் இல்லாக் கலை.

—ப. அ. கலாம், இடலாக்குடி.

❁

திங்களொளி போலெங்கும் தென்னகத்தில் புன்னகையால்
தங்குபுகழ் சீர்திருத்தம் தந்திட்டார்-பொங்கும்
அலைகடல்போல் ஆர்த்தெழும்போ தந்தோ! அழிந்தாள்
கலைவாணர் இல்லாக் கலை.

—ஜீ. கிருஷ்ணமூர்த்தி, பி.ஏ., திருவண்ணாமலை.

❁

கொஞ்சும் தமிழ்க்கலையைக் கொல்லவோ சாவே!
விஞ்சும் நகையரசை வீழ்த்திவிட்டாய்-நஞ்சே
நிலையான தியாகசே! நீண்ட இருள் ஆச்சே!
கலைவாணர் இல்லாக் கலை.

—அசோகன், பம்பாய்-17.

❁

சந்த பகிழான்கைப் பொருள்போலும் போர்க்கடலில்
நீந்தத் தெரியான்கை வாள்போலும்-வேந்தன்
நிலை கோடி யாளுங் கோல்போலும் ஆகுமே
கலைவாணர் இல்லாக் கலை.

—பூ. சு. கன்னியப்பன், குருவராயப்பேட்டை.

❁

சிலையன்ன பொன்னுருவத் தாள்மின் னிடையாள்
சிலைநின்ற பேரழகு மங்கை-விலையில்
தலைவ னிழந்தா நிலைபோ லயரும்
கலைவாணர் இல்லாக் கலை.

—எழிலன், திருச்சி.

❁

தன்மகனைத் தான்வளர்த்துத் தள்ளாடும் போதினிலே
இன்மகனைச் சாக்காட்டி லீந்ததுபோல்-மண்ணில்
சிலையாகிப் போய்விடுமோ! சீர்கெட்டுப் போமோ!
கலைவாணர் இல்லாக் கலை.

—மு. எ. நம்பெருமாள், கூத்திபாறை.

❁

சென்றுவிட்டான் "நல்லதம்பி" தொல்லுலகைச் சீர்திருத்தி
நன்று வளர்த்திட்டான் தன்மானம்-இன்று
தலையில்லா முண்டம்போல் (ஆ)னதே; நாஞ்சில்
கலைவாணர் இல்லாக் கலை.

—க. குமார், பரமேசுவரபுரம்.

கொடுமழை கோரப் புயலின் நடுவே
நடுங்கித் தவிக்கின்ற நாவாய்போல்-வடுவால்
குலைந்துளதே குன்று விளக்காய்த் திகழும்
கலைவாணர் இல்லாக் கலை.

—பெரி. இராசேந்திரன், மதுக்குடி.

❁

தலைவன் வரக்கண்டாள்; தன்னகத்தி லின்பம்
அலைமோத அன்னை யறியாமல்-கலையுடுத்தாள்;
கச்சணிந்தாள்; கற்றைக் குழலிலினிக் கண்கவரும்
கலைவாணர் இல்லாக் கலை.

—த. அறிவழகன், ஆற்காடு.

❁

ஆசிரியர் இன்றி அருந்தமிழ்நூல் கற்பதுவும்
மாசறுதா யில்லா மகவும்-பாசத்
தலைவன் இழந்திட்ட தாய்நாடும் போலாம்
கலைவாணர் இல்லாக் கலை.

—சு. மீனாட்சிசுந்தரன், காஞ்சிபுரம்.

❁

நீரில்லா நீள்கடலும் வேரில் முதுமரமும்
பாரிலுண்டோ? ஐயகோ தென்னாடே-வாழும்
நிலைகெட்டு வாழ்விழந்தாய் மேலுமா வேண்டும்
கலைவாணர் இல்லாக் கலை?

—சு. குமாரராசன், கும்பகோணம்.

❁

ஏங்குதே நம் உளங்கள் என்று மழியாத
பாங்குபுகழ் நண்பர் பறிபோக-ஓங்கும்
தலைவன் இழந்த தலைவியை ஒக்கும்
கலைவாணர் இல்லாக் கலை.

—இரா. துரை, தருமபுரி.

❁

நிலவிலா வானும் நறுமண மில்லா
மலரும் புலவனில் மன்றும்-உலகில்
தலைவனில் கைம் பெண்ணும்போல் தோன்றுமே அல்ல
கலைவாணர் இல்லாக் கலை.

—அ. சாமிநாதன், கடுவூர்.

❁

தென்றல் தவழவில்லை தேனிலவு தோன்றவில்லை
மன்றல் மலரவில்லை மாரி இல்லை-வென்றி
அலையற்ற நீராக ஆயிற்றே எங்கும்
கலைவாணர் இல்லாக் கலை.

—பசுமலை விர. முருகேசன், மதுரை.

❁

வெம்பாய்க் கசக்கும் வெறுங்கூடாய்க் காட்சிதரும்
தேர்பா நகைச்சுவையோ தீர்ந்ததுவும்-திம்பால்
அலைவா நிதிபோலும் அன்பருளா லாண்ட
கலைவாணர் இல்லாக் கலை.

—அ. சம்பந்த மூர்த்தி, கோயமுத்தூர்.

❁

விடுதலைப் போர்முரசம் விண்பிளக்கா முன்பே
இடுகா டடைந்தனரென் எஸ்கே-கடுகற்
சிலைபோலுங் காட்சி; சிரிப்புமன் னர்நம்
கலைவாணர் இல்லாக் கலை.

—புவிக்கோன், காளிங்கராயன்புதூர்.

❁

நம்மன்னன் போயினனே நம்துயரோ ஆறவில்லை!
அம்மம்ம தேறவில்லை! ஆரினி,சொல் ?-அம்மா!
தலையில்லா மெய்யே தமிழில் சிறப்புக்
கலைவாணர் இல்லாக் கலை.

—இரா. அகமழகன், சென்னை-18.

❁

அரசில்லா நாடும் அகலில்லா வீடும்
மரமில்லாத் தோப்பும் இயையும்-கரவா
பலஞானம் மக்கட்கு ஈயாதே பாரில்
கலைவாணர் இல்லாக் கலை.

—எழிலன், மேலக்கிருட்டினன்புதூர்.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நா